1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் || யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஆனிமாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 || 24-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சோழகக்காற்று இடையிடையே புசலைப்போன்று உரமாக வீசிக்கொண்டிருக்கின்றது. மப்புமந்தாரம் அதிகமாகக் காணப்படுகின்றது. இது மாம்பழகாலம், பலாப்பழகாலம், வெள்ளரிப்பழகாலம், வத்தகப்பழகாலம், அன்னாசிப்பழகாலம் ஆதியாம் பழங்களின் காலமாகும். அதனால் சந்தைகள், கடைகளெல்லாம் பழக்காட்சியாகவே காணப்படுகின்றன.

### கடைசித் தகுதிப்பரீட்சை

பதினாறுவயதுக்கு மேற்பட்டவர்களாய் அரசாங்கபாடசாலைகளிலே கல்வி பயின்றுவரும மாணவர்கள் அடுத்து நடைபெறவிருக்கும் எட்டாம்வகுப்புத் தகுதிப்பரீட்சையில் அரங்கேறததவறினால் அவர்கள் உயர்தரகல்விக்குத் தகுதியற்றவர்களென்று கொள்ளப்பட்டுப் பாடசாலைகளைவிட்டு விலகும்படி கேட்கப்படுவார்கள். 1956-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதியன்று பதினாறு வயதுக்கு மேற்பட்டிருக்கும் மாணவர்களே அவ்வாறு கேட்கப்படுவார்கள். ஆனால், இவர்கள் உதவிப்பணம்பெறும் பாடசாலைகளில் சேர்ந்துபடிக்க அனுமதிக்கப்படுவார்கள். ஆனால், இவர்களுக்கு அரசாங்கம் உதவிப்பணம் அளிக்கமாட்டாது. இவர்களைச்சேர்ப்பதும், இவர்களிடம் சம்பளம்வாங்குவதும் பாடசாலைஅதிபர்களைப் பொறுததாகும்.

### பரிதாபகரமான மரணம்

எல்பிட்டிக்குச் சமீபமான நியகாமாவிலே சென்றவியாழக்கிழமை இரவு வீசிய கடும்புயலாலே தென்னைமரம் ஒன்றுசரிந்து ஓர்குடிசைமேல்விழுந்த காரணமாக அதிலேவசித்திருந்த 39 வயதுள்ள ஜயசுந்தர மேரிநோனா எனும் ஓர்தாயும், அவள்புதல்விகளான ஜே. லீலாவதியும் (வயது 9), ஜே. மிஸியேயும் (6), புதல்வனான ஜே. தயாபாலாவும் (3) அம்மாததினுள் அகப்பட்டுநெரிந்து உயிர்துறந்தார்கள். மேரிநோனாவின் தாயான 60 வயதுள்ள பி. டி. சாம்பேநோனா கடுங்காயமடைந்து எல்பிட்டி ஆஸ்பத்திரியிலே அபாயகரமான நிலைமையில் இருந்துவருகின்றாள். அன்றிரவு அவ்வீட்டில் வசித்திருந்த ஐவரிலும் உயிர்பிழைத்தவள் இவளே. இரவு இரண்டுமணிவரை இவள் சமையல்அறையில் கால்அடி எடுத்துவைக்கும்போது திடீரென வீட்டின்மேல் ஏதோவிழுஞ்சப்தங் கேட்டாள். ஆனால், வீட்டைவிட்டு ஓடித் தப்புவதற்குள் அவ்வீட்டின் இடிகரையான பொருட்களால் தாக்குண்டு கீழேவிழுந்தாள். என்றாலும் வெகு கஷ்டத்துடன் வெளியேறியதும் கூச்சலிடத்தொடங்கினாள். அதுகேட்டுச் சுற்றத்தவர்கள் அழுதுகொண்டு அங்கு ஓடிச்சென்றார்கள். மூன்று பிள்ளைகளினதும் சரீரங்கள் அந்தப்படியே நசிந்துபோய் நிலத்துடன் அழுந்திப்போயிருந்தது.

### சு. வை. அதிகாரியின் கந்தோர்

யாழ்ப்பாணச் சுகாதாரவைத்திய அதிகாரியின்கந்தோர் சென்றவாரத்திலே நகரசபைக்கட்டடத்திலிருந்து யாழ்ப்பாணம் பெருந்தெருவிலே கன்னிகாமடத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள யூபிலிச்சுகாதாரநிலையத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

### செவிடர்—குருடர் பாடசாலை

அங்கிளிக்கன்சபை ஏற்கனவே இரத்மலானையில்ஒன்றும், சீதுவாவில் மற்றொன்றுமாக இருசெவிடர் — குருடர் பாடசாலைகளைக் கொண்டிருக்கிறது. தற்போது கைதடியிலே அரசினரின் வயோதிகர்சாலைக்குச் சமீபமாக மற்றோர் செவிடர் — குருடர் பாடசாலையை அமைப்பதற்குத் திட்டஞ்செய்து வருகின்றது. அரசாங்கம்இதற்கென்று காணியும், வயோதிகர்சாலையிலிருந்து மின்சாரமும், குழாய்த்தண்ணீரும் உதவுவதாக வாக்களித்திருக்கின்றது. இந்தப்பாடசாலையில் ஏறக்குறைய 75 முதல் 100 மாணவர்களுக்கு இடவசதியிருக்குமெனத் தெரியவருகிறது.

### மாகாணஅதிபரின் வேண்டுகோள்

வலிகாமம்மேற்குக் கிராமச்சங்கத் தலைவர்களின்மகாநாடு சென்ற 8-ந் திகதியன்று மானிப்பாய்ச் சனசமூக நிலைய மண்டபத்திலே நடைபெற்றது. வடமாகாணஅதிபர் திரு. எம் ஸ்ரீகந்தா அவர்கள் மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசியபோது: "பேச்சளவிலேநில்லாது செயலளவிலே காண்பிக்கவேண்டியகாலம் வந்துவிட்டது; சுதேசித்துணிகளுக்கு ஆதரவளிக்குமுகமாகத் தேசியவார கொண்டாட்டம் ஒன்றுநடத்த ஏற்பாடுசெய்வது நலமாகும்; யாழ்ப்பாணத்தின் சுபீட்சம் குடிசைக்கைத்தொழிலிலும், கமத்தொழிலிலுமே தங்கியுள்ளது; இவ்விஷயமாகக் கிராமாபிவிர்த்திச் சங்கங்கள் செய்யவேண்டியவைகள் எவ்வளவோ இருக்கின்றன" எனக் கூறி நின்றார்.

### நாய்களும் நன்றியறிதலும்

மத்துகாமத்திலே கடந்த சிங்களபுதுவருடப்பிறப்புத் தினமன்று ஜினதாச என்னும்வாலிபன் தனதுமாமனைக் கத்தியாற்குத்த எத்தனித்தானென்று குற்றஞ்சாட்டி மத்துகாம நீதித்தலத்திலே ஓர்வழக்குத்தொடரப்பட்டிருந்தான். சென்றவெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைசெய்யப்பட்டபோது நீதிபதி அவனைநோக்கி: நாய்கள் தானும் நன்றியறிதல் என்னஎன்பதை நன்குஅறிகின்றன; ஆனால், உன்போன்ற வாலிபர்களுக்கு அது ஏதோ அந்நியமானதாய் இருக்கின்றது; உன்னைப்பராமரிக்கப் பெற்றோர்தானுமில்லாது ஆறாடியாக நீ அலைந்தபோது உனதுமாமன் உன்னிலேபட்சம்வைத்து, உன்னைத்தனதுவீட்டிற்கு அழைத்துச்சென்று அன்புடன் பராமரித்து வந்திருக்கின்றார்; அதற்குப்பதில் நீ அவரைக்குத்திக்கொல்லக் கத்தியைப் பிரயோகித்திருக்கிறாயேஎனக்கூறினார். வாலிபன் நீதித்தலத்திலே தனதுமாமனிடம் பிரசித்தமாகமன்னிப்புக் கேட்டுக்கொண்டதின்பேரிலே தருமத்திற்கென ஐந்துரூபாகொடுக்குமாறு அவனுக்குத் தண்டனைவிதித்தார்.

### இன்னும் மூன்று மாதத்தில்

பங்கீட்டரிசியைக் கொத்துகள் கொண்டு அளந்து விற்பதற்குப்பதில் அதனைநிறுத்துவிற்க வேண்டுமென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. முந்தப் பரிசோதனைநிமித்தமாகக் கொழும்பிலே அரிசிஒருறாத்தல் 25 சதமாக நிறுத்துவிற்கப்படவிருக்கிறது

### செல்வி எஸ். அன்னறெஜினம்மா பி.ஏ.

திருச்சினாப்பளி, திருச்சிலுவைக் கல்லூரியில் உயர்தரகல்விகற்று வந்தவரான செல்வி எஸ். அன்னறெஜினா அவர்கள் அண்ணாமலைச்சர்வகலாசாலை பி. ஏ. பரீட்சையில் அரங்கேறியிருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம். இவர் நம்பட்டணப் பெருந்தெருவிலே 'முத்துவைத்தியசாலை' யென அறியப்படுகின்ற பிரஸ்தாப ஆயுள்வேதவைத்தியசாலையை நடத்திவருகிறவரான திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை வைத்தியர்அவர்களின் சிரேஷ்டபுதல்வியாவர்.

### பண்ணைப்பாதையும் தொங்குபாலமும்

யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப்பகுதிக்கு நடத்தும் போக்குவரத்தை இலகுவாக்கும் நோக்கமாய்ப் பண்ணைக் கடற்பாதைகளின் நடுவிலுள்ள கடலுக்குமேலாகத் தொங்குபாலம் ஒன்று அமைப்பதற்கான வசதிகளை நேர்முகமாகப் பரிசீலனைசெய்யுமாறு பகிரங்கவேலைப்பகுதி உதவித்தலைவரான திரு. சி. இராசையாஅவர்கள் சென்ற 22-ந்திகதி பண்ணைக்கடற்பாதையைப் பார்வையிடலாயினர். இப்பாதையிலே தொங்குபாலம் அமைக்கப்பட்டால் இப்போது பண்ணைக்கடலைக் கடப்பதற்கு மணிக்கணக்கிலே காத்துக்கொண்டிருக்கும் பிரயாணிகளுக்கும், வண்டிகளுக்கும் அது பெரும்வாய்ப்பாகும்.

### மருதமடுத் திருப்பதி யாத்திரை

மருதமடுத் திருப்பதியின் ஆடிப்பெரிய மகோற்சவத்தை முன்னிட்டு றெயில்வே மார்க்கமாக மூன்றாமவகுப்பிலே அங்குசெல்லும்யாத்திரிகர்களுக்கெல்லாம் வழமைபோல ஒற்றைச்சலாரிலும், அதிற்பாதியிலும் சென்று திரும்புதற்கான மலிவுதிக்கெற்றுகள் வழங்க றெயில்வேப்பகுதியார் ஒழுங்குசெய்திருக்கின்றனர். இந்த மலிவுதிக்கெற்றுகள் மடுறோட் ஸ்றேஷனிலிருந்து ஐம்பதுமைல் தூரத்திலும், அதற்கு அப்பாலுமுள்ள ஸ்றேஷன்களிலேயே இந்த ஆனிமாதம் 27-ந் திகதிமுதல் அடுத்தநிகழும் ஆடிமாதம் 2-ந்திகதி வரையிலே வழங்கப்படும். பின்னர் அவைகள் ஆடிமாதம் 4-ந் திகதி முடிகிறவரையிலே செல்லும். இம்மாதம் 22-ந்திகதிக்கும், ஆடிமாதம் 4-ந்திகதிக்குமிடையிலே மடுறோட் ஸ்றேஷனுக்கும், மடுத்திருப்பதிக்குமிடையே றெயில்வேப்பிரயாணத்தைத் தொடர்ந்து பஸ்பிரயாணம் நடத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருக்கின்றன. வளர்ந்தவர்களுக்கு பஸ்பிரயாணச்செலவு 75 சதம். பன்னிருவயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு 40 சதம். பத்துப்பேர் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினர் கூட்டமாக முதலாம், இரண்டாம் வகுப்பிலே பிரயாணஞ் செய்யுமிடத்து ஒற்றைச்சலாரிலும், அதிற்காற்பங்குசலாரிலும் சென்று திரும்பலாம். ஆனால், இவர்கள் கொழும்பிலுள்ள றெயில்வேப்பகுதி வர்த்தகமேற்பார்வையாளருக்குக் கால நேரத்துடன்எழுதி ஒழுங்குசெய்து கொள்ள வேண்டும்.

### குறைந்தபட்சம் நூறுவருடம்

மகாரகாமாவைச்சேர்த பிலியந்தலை மத்தியகல்லூரிப் பரிசளிப்புவிழா சென்ற ஞாயிறன்று நடந்தேறியது. அதற்கு இலங்கைச் சர்வகலாசாலை உபவேந்தரான சேர் நிக்கலஸ் அற்றிக்கலை அவர்கள் தலைமைவகித்துப் பேசியவிடத்து: குறைந்தபட்சம் மேலும் நூறுவருடங்களுக்கு இலங்கை ஆங்கில பாஷை இல்லாது இருக்கமுடியாது; சிங்களத்தை அரசாங்கபாஷையாகச் செய்யவேண்டுமென்று அநேகர் ஆர்ப்பரித்தபோதிலும் ஆங்கிலமின்றி இருப்பது கூடியகாரியமன்று; நம்முடைய வேலைமுழுவதையும் தனியச்சிங்களத்தையேகொண்டு நாம்செய்துகொள்ள முடியாது; விஞ்ஞானசாஸ்திரநூல்களும், உயர்தரகல்விநூல்களும் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டுள்ளன; ஆதலால் ஆங்கிலஅறிவு அவசியமானதாகும்; சர்வகலாசாலையில் சேர்ந்தவர்கள் சிங்களத்தைப்போலவே ஆங்கிலத்திலும் சிறந்தஅறிவைக் கொண்டவர்களாய் இருக்கவேண்டுமெனக் கூறலாயினர்.

### அரசாங்க பாராளுமன்றகட்சி

சனப்பிரதிநிதிகள் சபையிலே தண்டகமுலாப் பிரதிநிதியும், ஓர் சுயேச்சை அங்கத்தவருமான திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லஅவர்கள் அரசாங்க பாராளுமன்றகட்சியைச் சேர்ந்தவர்களில் ஒருவர். இவர் சமீபத்திலே அனுரதபுரத்தில் நடைபெற்ற ஓர் பொதுக்கூட்டத்திலே கவர்னர்—ஜெனறலையும், பிரதமரையும் பரிகசிக்கத் தக்கமுறையில் பேசியதையிட்டுச் சென்ற செவ்வாய்க்கிழமைகாலை அக்கட்சிகூடி ஆலோசித்து அதிலிருந்தும் அவரை வெளியேற்றிவிடலாயிற்று. அங்ஙனம் வெளியேற்றத் தீர்மானித்த கூட்டத்திற்சமுகமாயிருந்த 79 அங்கத்தவர்களில் திரு. ஆர். ஜி. சேனாநாயக அவர்கள் மாத்திரம் அதற்கு மாறாக வாக்களித்தார். பிந்த இவரும் அரசாங்க கட்சியிலிருந்து தமது அங்கத்துவபதவியை இராசிநாமாச் செய்து விடலாயினர். இவர் அரசாங்க கட்சியிலிருந்து விலகியபோதிலும் ஐக்கியதேசீயகட்சியில் (யு. என். பி.) ஓர் அங்கத்தவராய் இருந்துவருவாராம். பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்குச் சார்பாகவே வாக்களிப்பாராம். ஆனால், கட்சியின்கொள்கைக்குமாறாக அரசாங்கம் நடக்கும்போது வாக்களியாது விலகிக்கொள்வாராம். தாம் ஐக்கியதேசீயகட்சி அபேட்சகராகத் தேர்தலுக்கு நின்று வெற்றிபெற்றமையாலே எந்த எதிர்க்கட்சியுடனும் சேரமாட்டாராம்.

* * *

● பிரித்தானியிலே பற்சொத்தை அதிகரிக்க இனிப்புப்பண்டங்களை அதிகமாகப்பாவிப்பதே ஓர் முக்கியகாரணமென்று பிரித்தானிய சுகாதாரமந்திரிகாரியாலயம் ஓர்சுற்றறிக்கை விடுத்துள்ளது. அதனால்மிட்டாய்களை—விசேஷமாய் ஆகாரத்துக்குப்பின் உண்ணப்படும் மிட்டாய்களைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று அது ஆலோசனைகூறியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரொட்டஸ்தாந்த குடும்பத்தில் குடும்ப செபமாலை

தமிழாக்கம் — M. S. M.

நான் ஓர்புரொட்டஸ்தாந்த குடும்பத்தில் பிறந்தவன். அந்தமதத்திலேயே வளர்ந்தேன். சிறுவயதில் ஞாயிறு தோறும் கோவிலுக்குப்போகவும், ஞானஉபதேசம் கற்கவும் தவறினதில்லை. மற்றச்சிறுவர்களை இதுவிஷயத்தில் பின்பற்றிவந்தேன். இந்தநல்ல வழக்கம் நீண்டகாலம் நீடிக்கவில்லை. ஏனெனில், எனது 13-வதுபிராயத்தில் வயிற்றுப்பிழைப்புக்காக எங்கெங்கு வேலைகிடைத்ததோ அங்கங்கு போக நேரிட்டது. அப்பொழுது கோவிலையும், என்கடவுளையுமே மறந்துவிட்டேன். ஆனால், சபிப்பதற்கோ, சத்தியம்பண்ணுவதற்கோ ஓரோர்சமயம் கடவுளை அழைப்பேன். அவ்வளவுதான் என்னிடமிருந்த வேதஉணர்ச்சி.

1940-ம்ஆண்டு பட்டாளத்தில் சேர்ந்தேன். படைவீரனானதும் அகிலத்தின் பலபாகங்களுக்கும் செல்ல நேர்ந்தது. புதுப்புதுஊர்களைத் தரிசித்தேனேயன்றி, என் மதவிஷயத்தில் விருப்பங் கொள்ளவுமில்லை. மதாசாரங்களைக் கைக்கொள்ளவுமில்லை. 1944-ம் ஆண்டு ஓர்அழகியயுவதியை மணந்தேன். அவள் எனக்கேற்ற அருமைமனைவியானாள். என்னைக் கண்ணுங்கருத்துமாகக் கவனித்துவந்த துணைவியானாள். இப்போது என்மனைவியும், இருகுமாரத்திகளும் எனக்குஆறுதலாக இருக்கின்றார்கள்.

நிற்க, 1947-ம்ஆண்டு நான் வியாதிவாய்ப்பட்டேன். இராணுவ ஆஸ்பத்திரியில் என்னைக் கொண்டுபோய்ப் போட்டார்கள். மனைவிமக்களை விட்டுப்பிரிந்தகவலை வியாதியைவிட என்னை அதிகமாக வாட்டியது. மூன்றுநாட்களாகிவிட்டன, என்கவலை தீரவில்லை. கஸ்திமேலிட்டது. அந்தநேரத்தில் எனக்குஆறுதலளிப்பவர் ஒருவர் எதிர்பாராதவிதமாய் என்முன் வந்துநின்றார். அவர்தான் ஓர்கத்தோலிக்க குருவானவர் அவரைப் பார்த்தேன். அவர்மீது பிரீதியுண்டாயிற்று. அவரோ புன்னகையுடன் என்வியாதியைப் பற்றி விசாரித்தார். அத்தோடு நின்றுவிடாது எனக்கு ஓர்சிகறெற்றும் கொடுத்தார். நானும்துணிந்து, "நான் யாரென்று உங்களுக்குத் தெரியாதுபோல் இருக்கிறது; நான் ஓர்புரொட்டஸ்தாந்தன்; என்மட்டில் நீங்கள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்" என்று கிண்டலாகச்சொன்னேன். "அதற்கென்ன சிநேகிதா, கத்தோலிக்கன்கொடுத்த சிகறெற்றைப் புகைத்தால் குண்டுவெடித்திடுமென்று பயப்படுகிறாயோ? அதற்குக் காரணமில்லை; அச்சமின்றிப் புகைக்கலாம்" என்று விளம்பிவிட்டு அகன்றுபோனார் அந்தக் குருவானவர்.

அன்றுமுதல் அவரைநேசிக்க ஆரம்பித்தேன். அவர்வருகையை ஆவலாய் எதிர்பார்த்திருப்பேன். அவரிடம் வேதவிஷயமாகப் பலபலகேள்விகள் கேட்கவேண்டுமென்று ஆசைகொண்டேன். அவரைச் சந்திக்கும்போதெல்லாம் அவரிடமிருந்து எனக்குச்சகாயமான காரியங்கள் கிடைக்கக்கூடுமெனும் எண்ணம் வந்துகொண்டேயிருந்தது. ஒருநாள் என்படுக்கைமுன் அவர் வந்துநின்றார். அப்போது "சுவாமி என்னிடமில்லாது உம்மிடமிருப்பதுதான் என்ன?" என்று வினவினேன். அவர் மறுமொழியாக ஒரேயொருவார்த்தை உரைத்தார். அது "விசுவாசம்" எனும் வார்த்தையே. அந்நேரமுதல் விசுவாசம்எனும் மொழியானது என் காதில் சதாஒலித்துக்கொண்டிருந்தது. அதை எங்குபெறலாம்? எப்படி அடையலாம்? என்று அறிய என்மனம் துடித்துக்கொண்டிருந்தது. அதைக் காசுகொடுத்து வாங்கமுடியாது. வைத்தியர்கள் ஊசியைக்கொண்டு மருந்து ஏற்றுகிறதுபோல் செலுத்தவும்இயலாது. அப்படியானால் அதைஅடைவதுதான் எப்படி?

என்நண்பர் குருவானவரிடம் என் மனதில் இருப்பனவற்றையெல்லாம் வெளிப்படுத்தினேன். அவர் பலதடவைகளில் வேதசத்தியங்களை எடுத்துக்காட்டி, கடவுள்பால் நம்பிக்கையூட்டி, கடைசிச்சம்பாவனைக்கு வழியுங்காட்டிக் கொடுத்தார். ஆகவே, கடவுள் பேரில் பக்திகொண்டேன். விசுவாசம் என்னவெனக் கண்டேன். கடவுளால் மனிதனுக்கு இலவசமாகக் கொடுக்கப்படும் சுபாவத்திற்கு மேற்பட்ட ஓர் பெருங்கொடையே விசுவாசம். அது கடவுள் வெளிப்படுத்தியுள்ளவைகளை நமது அற்பஅறிவால் கண்டுபிடிக்க முடியாவிடினும், சந்தேகமின்றி நாம் நம்பும்படி உதவிபுரியும். அவற்றில் இயங்கிவாழ்வது கஷ்டமாகவே தோன்றியது. ஆனால், கடவுளைப்பார்த்து மன்றாடினேன். அடிக்கடிசெபித்தேன். விசுவாசம் என்னிருதயத்தில் ஆழமாய் ஊன்றிடவேண்டினேன். கடவுள் என்னைக் கைவிடவில்லை.

கிறீஸ்மஸ்பண்டிகை வந்தது. அன்று என்னைப்பார்க்கவந்த நேசகுருவானவர் எனக்குக் கிறிஸ்மஸ்காட் கொண்டுவரவில்லை. சிகறெற்முதலாய்க் கொடுக்கவில்லை. ஆனால், ஓர்செபமாலையைக் கொடுத்தார். எப்படிச் செபிப்பதென்றும் கற்பித்தார். எனக்குத் தொடக்கத்தில் நன்குபுலப்படவில்லை. விசித்திரமாக இருந்ததென்றால்ஆச்சரியமா? ஆயினும், சுவாமியாருக்கு நான் கடமைப்பட்டிருந்தமையால், என் நன்றியின் அறிகுறியாகச் செபமாலை செபித்துவந்தேன். என் மனக்கண் துலாம்பரமாகிக்கொண்டே வந்தது. ஞானவெளிச்சம் இருதயத்தினுள் வீசினது. செபமாலைமட்டிலே மட்டில்லா ஆசை கிழம்பிற்று. சரியாகச்சொல்லத் தெரியாவிடினும், அறிந்தஅளவில் அநுதினமும் சொல்லிவந்தேன். நான் ஆஸ்பத்திரியைவிட்டு இல்லந்திரும்பினபின் நான்மட்டுமல்ல, என்மனைவி, புத்திரிகள் எல்லோருமே ஏகோபித்துச் சொல்லஆரம்பித்தோம். ஒன்றின்பின் ஒன்றாய் 53 தடவை "பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே" எனும் செபத்தைச் சொல்லுவது, மந்திரவாதிகள் ஒரேமந்திரத்தைத் திரும்பத்திரும்ப ஓதுவதுபோல் தோன்றியன என்மனைவிக்கு. அந்தத் தப்பெண்ணத்தை நீக்கிவிடுவதற்காக நான் என்பாரியாளுக்குக் கற்பித்தபாடமாவது: "என் கண்ணே! நாம் திரும்பத்திரும்ப ஒரே செபத்தைப் பன்முறைசெபிப்பது உனக்குவிபரீதமாகத் தோன்றுகிறதல்லவா? அதில் விபரீதமில்லை; நம்வீட்டில் நேரிடுவதைப்பார்; நமதுகுழந்தைகள் பிஸ்கோத்தின்மேல்ஆசைகொண்டு உன்னிடம்வந்து, "அம்மா பிஸ்கோத் கொடு, பிஸ்கோத்கொடு" என்றுகத்துகிறார்கள்; பிஸ்கோத் கிடைக்கும்வரையில்கத்துவார்கள் அல்லவா? அவ்வண்ணமே குழந்தைகளாகியநாம் கன்னிமரியதாயிடம்வரங் கேட்பது கிடைக்கும்படியாகத் திரும்பத்திரும்பக் கேட்கிறோம்; இதில் என்னவிபரீதம்" என்பதே. இவ்வாறு சொன்னதைக் கேட்ட என்மனைவி அதைஆமோதித்தாள். திருப்தியடைந்தாள். எங்கள் வீட்டில் இப்போது செபமாலை செபிக்கப்படுகின்றது. ஓர்புரொட்டஸ்தாந்த குடும்பத்தில் குடும்பசெபமாலை செபிக்கப்படுவதை அறிய ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

1953-ம்ஆண்டு பங்குனிமாதம் 20-ம் நாள் நான்சத்தியமறையில் சேர்ந்தேன். யேசுவின்மறைஉடலில் ஓர் அங்கமானேன். அடுத்தநாள் யேசுவின்சரீரத்தைப் புசிக்கும்பாக்கியம் பெற்றேன். ஒருவாரம் கடந்தபின் மேற்றிராணியார் எனக்கு உறுதிப்பூசுதல் கொடுத்தார். இப்போது என்சீவியம் புதுச்சீவியமாகப் புலர்ந்துள்ளது. நான் அனுபவிக்கும் ஆனந்தத்திற்கு அளவில்லை. என் மனைவியும், மக்களும் ஞானஸ்நானத்திற்கு முஸ்திப்பாக ஞானஉபதேசம் கற்றுவருகிறார்கள். என்குடும்பம் ஓர் உத்தமகத்தோலிக்க குடும்பமாகத் துலங்கவேண்டுமென்று கன்னிமரியாயை மன்றாடுகிறேன். நாங்கள் குடும்ப செபமாலையை ஒருபோதும் கைவிடுவதில்லையென்று உறுதிகூறுகிறோம். கடவுள் எங்கள் பிரதிக்கினையை ஆசீர்வதிப்பாராக.

— வேளாங்கண்ணிக் குரலொலி.

# "நீ கடைசிச்சல்லி உத்தரிக்கும் வரையும்..."

(சி. எஸ். நாயகம், ஸ்ரேஷன்மாஸ்ரர், கெம்பாஸ் — மலாயா)

இதனை யார் வசனித்தார்? கிறீஸ்துநாதரே வசனித்தார். அவர் யார்? பரமதிரித்துவத்தின் இரண்டாம்ஆளாகிய சுதனாகியசர்வேசுரன். அவர் உலக ஈடேற்றத்திற்காக — மானிட இரட்சணியத்திற்காக மானிடச்சட்டை சாத்திவந்த தேவகுமாரன். திவ்விய அவதாரபுருஷர். "என்நேசகுமாரன் இவரே! இவர்பேரில் நாம் பூரணபிரியமாய் இருக்கிறோம்; இவருக்குச் செவிகொடுங்கள்" (மத் 17:5). இது தேவ குமாரனாகிய கிறீஸ்நாதரைப்பற்றிய தேவபிதாவின் சாட்சியம். "நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு இவ்வுலகத்துக்கு வந்தேன்" (அரு. 16:28). "நான் சத்தியத்துக்குச் சாட்சிசொல்லப் பிறந்தேன்" (அரு. 18:37). "நான் உங்களோடு பேசுகிற வார்த்தைகளை நானாகப் பேசுகிறதில்லை; பிதாவானவர் எனக்குள்வசித்து அவரே என் மூலமாகப்பேசிக் கிரிகைகளைச் செய்கிறார்" (அரு. 14:10). ஏனெனில், "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (அரு. 8:16)

இன்னும் "நான் கடவுளிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன்" (அரு. 8:42). "கடவுள்சத்தியர். பொய் உரையாத் தெய்வம். நான் அவரிடத்தில் கேள்விப்பட்டவைகளையே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (அரு. 8:26). "என்வாக்கியங்கள் மகா பிரமாணிக்கமும், உண்மையும், நேர்மையுமான வார்த்தைகளாகும்" (காட்சி. 21:5). "யாதொருவன் என்வார்த்தையைக் கைக்கொண்டால் அவன் என்றென்றைக்கும் சாவை (அதாவது நித்தியமரணத்தை — நரகத்தை)க் காண்பதில்லை" (அரு. 8:51). "என்வாக்கியங்களை உயிருள்ளவிசுவாசத்தோடு ஏற்று அதன்படிநடப்பவன் தன்வீட்டைக் கற்பாறையின்மீது கட்டிய மதியூகிக்கு ஒப்பாவான். அவனுக்கு என்றென்றைக்கு சேதமில்லை — அழிவில்லை — அசைவில்லை" (மத். 7:24, 25). இவையெல்லாம் கிறீஸ்துநாதர் தம்மைப்பற்றிக் கூறியசாட்சியங்கள்.

இனி, "வேதவாக்கியம் அல்லது தீர்க்கதரிசனம்" என்றால் என்ன? "எக்காலத்திலாவது மனுஷருடைய வல்லமையினால், அல்லது மனதினால் உண்டாகாமல் சர்வேசுரனுடையசித்தப்படி பரிசுத்தவான்கள் இஸ்பிரீத்து சாந்துவினால் ஏவப்பட்டு — தூண்டப்பட்டுப் பேசியதை, எழுதியதையே வேதவாக்கியம்" (2இரா. 1:21)என்று சொல்வோம். அப்படியான வேதவாக்கியம் எப்படிப்பட்டது? "அது உயிருள்ளதும், சக்தியுள்ளதும், இருபுறமும் கருக்குள்ள எந்தவாளிலும் பார்க்க அதிககூரானதுமாயிருந்து, ஞானாத்துமாவையும் சீவாத்துமாவையும், மூட்டுகளையும், மூடக்குகளையும், மூளையையும்கூட ஊடுருவிப் பிரிக்கத்தக்கதுமாய், இருதயத்தின் நினைவுகளையும் வகையறுக்கத் தக்கதுமாய் இருக்கின்றது" (எபி. 4:12). எனவே, வேதவாக்கியம்என்பது விளையாட்டானதன்று. பரிகாசத்துக்குரியதன்று. ஏனெனில், அது இஸ்பிரீத்துசாந்துவின் திருவாக்கியம். இஸ்பிரீத்துசாந்து என்றால் யார்? அவர் தமதிரித்துவத்தின் மூன்றாம்ஆளாகிய சர்வேசுரன். ஆகவே, அவர் கடவுள்—சர்வேசுரன். கடவுள் ஒருவராயிருக்கிறார். ஆள்வகையில் பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து என மூவராயிருக்கிறார். தமதிரித்துவத்தில் இஸ்பிரீத்துசாந்துவானவர் மூன்றாவதுதேவஆள். இவரே கொடைகளின் பிதா. ஞானத்தின் ஊற்று. வரப்பிரசாதத்தின் ஊறணி. வரங்களின் வாய்க்கால். திருச்சபையின் உயிர். சகலரினதும் உயிர்நாடி. அத்தகைய ஞானத்திற்கும், வரங்களுக்கும் இருப்பிடமும், ஊற்றுமாயிருக்கிறவரின் வாக்கியம் வேதவாக்கியமாகும். "எவ்விதமாய், அல்லது எதைப்பேசுவோமென்று நீங்கள் முன்னதாக யோசித்துக் கவலைப்படாதிருங்கள். ஏனெனில், உங்கள்எதிராளிகள் எல்லோரும எதிர்க்கக்கூடியமுறையில் எதிர்க்கவும், மறுக்கவும்கூடாத வாக்கும், ஞானமும் நான் உங்களுக்குக் கொடுப்பேன். அதேதெனில், பேசுகிறவர்கள் நீங்கள்அல்ல. உங்கள்பிதாவின் இஸ்பிரீத்துவானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்" (மத். 10:19, 20. லூக். 21:15). "உன்னதத்திலிருந்துவரும் வல்லபத்தை (பரிசுத்த ஆவியை) நீங்கள் பூண்டுகொள்ளும் வரையில் பட்டணத்திலே தங்கியிருங்கள்" (லூக். 24:49). 'என்நாமத்தினால் பிதாவானவர் அனுப்பப்போகிற தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் சகலத்தையும் உங்களுக்குப் படிப்பித்து நான் உங்களுக்குச் சொன்னயாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (அரு. 14:26).

"அப்பொழுது பலத்தகாற்றடித்தாற்போலத் திடீரென வானத்தினின்று ஓர்முழக்கமுண்டாகி, அவர்கள் (அப்போஸ்தலர்கள்) உட்கார்ந்திருந்த வீடு முழுமையும் நிரப்பிற்று. அல்லாமலும், அக்கினிமயம்போன்ற பிரிந்த நாவுகள் அவர்களுக்குத்தோன்றி, அவர்களில் ஒவ்வொருவர்மேலும் வந்துதங்கினது. அவர்கள்எல்லோரும் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டுப் பேசும்படிக்கு இஸ்பிரீத்துசாந்துவானவர் அவர்களுக்குக்கொடுத்த வரத்தின்படியே பற்பலபாஷைகளில் பேசத்தொடங்கினார்கள்" (அப். நட. 2:2-4). ஆகவே, இவ்விதமான கொடைகளின்பிதாவும், ஞானத்தின் ஊற்றுமாகிய திவ்விய இஸ்பிரீத்து சாந்துவினால் தூண்டப்பட்டுப்பேசிய— எழுதியவாக்கியங்களே வேதவாக்கியங்கள்என்பதில் அணுவளவேனும்சந்தேகம் வேண்டியதில்லை.

வேதவாக்கியங்கள் நமக்கு உயிர்தரும் மன்னாக்கள். ஒளிதரும் தீபஸ்தம்பங்கள். மோட்ச வழிகாட்டிகள். இரட்சணிய கேடயங்கள். "மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய வாயினின்றுபுறப்படுகிற எந்தவாக்கியத்தினாலும் (வேதவாக்கியம்) பிழைக்கிறான்" (மத். 4:4) என்று திவ்வியகர்த்தர் சொன்னதிலிருந்து வேதவாக்கியம் மன்னாஎன்பதில் தடையென்ன? இரவிலே தீபஸ்தம்பத்தைக் கொண்டு கடவுள் இஸ்ரயேல்சனங்களை வழிநடத்தினர். அதேபோல இந்தஅந்தகாரஉலகில் நடமாடும்எங்க

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### மகாலய கபாடங்கள்

ரோமாபுரி, சம்பேதுருவானவர் மகாலயத்தின் பிரதம உட்பிரவேச வாயில்களுக்கான புதிய வெண்கலக் கதவுகளின் தட்டுகள், அலங்கார சித்திரங்கள் அமைந்த கட்டுக்கோப்பின் நிர்மாணவேலைகள் ஜேம்ஸ் மன்சூ எனும் பேரான சிற்பியாலே பூர்த்திசெய்யப் பட்டுவிட்டன. புரொபெசர் மன்சூ அவர்கள் இந்தக் கதவுகளை வார்ப்பதற்குத் தற்போது ஆயத்தஞ்செய்து கொண்டிருக்கின்றார். 1956-ம் ஆண்டின் இறுதியில்தான் இந்தவேலை பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. முழு நிர்மாணங்களையும் பொருத்துவதற்கு அவருடைய சித்திரசாலை அதிகஞ் சிறிதாயிருப்பதாலே மிலான் நகரிலுள்ள ஸ்போர்செஸ்கோ கோட்டையின் மண்டபங்களில்ஒன்றை உபயோகிக்க அனுமதிக்கப்பெற்றிருக்கின்றார். இந்தக் கதவுகளுக்குத் தேவைப்படும்நிதியானது தமது சீவியத்தின் பிற்பட்டகாலத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றவரும், சம்பேதுருவானவர் மகாலய குரவர்சங்கத்திலே ஓர் கனனாயிருந்து காலஞ்சென்றவருமான பவேரிய நாட்டின் இளவரசர்ஒருவரால் விடப்பட்டிருந்தது.

### இரு முஸ்லீம் புத்தகங்கள்

எகிப்திலே கிறீஸ்துநாதரைக் குறித்து இருமுஸ்லீம் அறிஞர்களால் எழுதப்பட்டுள்ள புத்தகங்கள் நம்முடைய திவ்வியகர்த்தரையும், அவரது போதனையையும்பற்றிக் கல்விமான்களான முஸ்லீம்களுள் ஒருபாலார் மத்தியிலே மாற்றமான ஓர் மனப்பான்மை ஏற்பட்டிருப்பதைப் பிரதிபலிக்கின்றனவென அங்கு கெய்ரோநகரிலுள்ள தொமினிக்கன்சபைக் குருமாரின் கீழைத்தேச கல்விஸ்தாபன தலைவரும், எகிப்திய தொமினிக்கன்சபைக் குரவருமான வண. அனாவற்றிசுவாமியார் ரோமாபுரியிலே தெரிவித்திருக்கின்றார். "இதுகாலவரை முஸ்லீம் நூலாசிரியர்கள் சுவிசேஷங்களின் உண்மையை மறுத்துவந்தார்கள்; நம்முடைய திவ்வியகர்த்தரைப்பற்றி அவர்கள் பேசியபோதெல்லாம் கோறானிலே அவரைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதை ஆதாரமாகக் கொண்டுதான் பேசிவந்தார்கள்; ஆனால், "கிறீஸ்து நாதரின் சுபாவத்தன்மை", "அநீத நகரம்" எனும் நாமங்களுடன் சமீபத்திலே வெளிவந்துள்ள இருநூல்களும் கிறீஸ்து நாதரைப்பற்றி எழுதுவதில் சுவிசேஷங்களையே ஆதாரமாகக் கையாண்டிருக்கின்றன; இவற்றிலே "கிறீஸ்துநாதரின் சுபாவத்தன்மை" என்றநூலை எழுதியவரான மகமது எல் அக்குவாட் அவர்கள் கிறீஸ்துநாதரின் சரித்திர சம்பந்தமான இலட்சணத்தையும், சுவிசேஷங்களின் உண்மையையும் தாபித்திருக்கின்றார்; "அநீதநகரம்" என்ற நூலை எழுதியவர் இபிறாஹிம் சர்வகலாசாலையின் முன்னை நாள்டக்றர் கமெல் ஹுசேயின் அவர்கள்; தமது ஆராய்ச்சியிலே இரட்சகர் விசாரணை செய்யப்பட்டதையும், அவர் தண்டனை விதிக்கப்பட்ட காரணத்தையும்பற்றிய தமதுசொந்தத்தீர்ப்பிலே இந்த விசாரணை சரித்திரத்திலேயே மிகப்பாரிய தவறென இவர் கொள்ளுகிறார், எனச் சுவாமியார் தெரிவித்திருக்கின்றார்.

### பிறேசில்நாட்டின் புதியதலைநகர்

வருகிற ஆடிமாதம் சர்வதேச சற்பிரசாதமகாநாடு கூடவிருக்கின்ற பிறேசில்நாட்டின் ஜனாதிபதி அவர்கள் சமீபகாலத்திலே அந்நாட்டின் புதிய தலைநகர் அமைக்கப் பட்டுவரும் தலத்திலே சுற்றுப்பிரயாணஞ் செய்யும்போது றையோ டி ஜனேய்ரோ நகரின் அதிமேற்றிராணியாராகிய கருதினால் தே பரோஸ்கமாறா ஆண்டவர்சமேதராகவே செல்லவிருக்கின்றார். கருதினால் ஆண்டவர் அந்தத்தலத்திலே திறந்தமைதானத்தில் திவ்விய பூசை நிறைவேற்றுவார். அந்நாட்டின் தற்போதைய தலைநகரமாகிய றையோ டி ஜனேய்ரோ வினிடமாகப் புதிய தலைநகரை அமைக்குமாறு 1889-ம் ஆண்டு திட்டஞ்செய்யப்பட்டது. அங்கே இது கோயாஸ் இராச்சியத்தின் மத்தியிலுள்ளது. புதிய தலைநகர் "வேறாக் குருஸ்" — அதாவது, உண்மையான திருச்சிலுவையென அழைக்கப்படும் போல் இருக்கிறது. இந்தநாமம் 1500-ம் ஆண்டு பிறேசில் நாட்டைக் கண்டுபிடித்தவரான பீட்றோ அலவாறெஸ் கபினால் என்பவரால் அதற்கு வழங்கப்பட்டதாகும்.

### மனந்திரும்பிய கம்யூனிஸ்தர்

லண்டன்நகரிலே இருபதுவருடங்களுக்குமேல் கம்யூனிஸ்தகட்சியில மிகவிசேஷப்பட்ட ஓர் அங்கத்தவராய் இருந்துவந்த திரு. ரொம் கீப்எனபவர் மனந்திரும்பிச் சமீபத்திலே தனது புதல்வனான எட்டு வயதுள்ள மைக்கேலுடன் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்துகொள்ளலாயினர். இவர் ஓர் ஆகாய விமானத்திலே ஐஸ்லாந்துதீவுக்குமேலாக 7,000 அடிஉயரத்தில் பறந்துசென்றபோது தனது உடன்பிரயாணியான ஓர் கத்தோலிக்கருடன் சம்பாஷிக்க நேர்ந்ததிலிருந்து கத்தோலிக்க திருச்சபையைப்பற்றி அறிந்துகொள்வதற்கான முதலாவது சந்தர்ப்பத்தைக் கண்டுகொள்ளலாயினர். பிந்த இவர் அமெரிக்க ஐக்கிய தேசத்திலே மற்றுஞ்சில கத்தோலிக்கரைச் சந்திக்கவும் அச்சம்பாஷணை வழிபண்ணிவிடலாயிற்று. அவர்களில்ஒருவருடன் கடிதப்போக்குவரத்து நடத்தி வந்ததிலிருந்து இவர் கத்தோலிக்க திருச்சபையைப்பற்றி நன்கு அறிந்துகொள்ளலாயினர். லண்டன் நகரிலே இவர் கம்யூனிஸ்த கட்சிக்காக அயராது உழைத்துவந்ததின்பயனாக "ரொம்மான் வெகுமானமும் வழங்கப்பெற்றிருந்தார். இரண்டாவது உலக யுத்தத்தின்பின் இவர்லண்டன் நகரிலே வேலை நிறுத்தங்களை ஒழுங்குபடுத்திநடத்துவதில் பிரசித்திபெற்றிருந்தார். தனது மனைவியாரும் திருச்சபையில் சேர ஆயத்தஞ்செய்து வருவதாக இவர் தெரிவித்திருக்கின்றார்.

### அடைக்கலம் புகுந்த அகதி

நாஸிய, கம்யூனிஸ்த ஆட்சியிலே பெரிதும்துன்பவாதைகள் அனுபவித்தவரான செக் சாதியைச்சேர்ந்த ஓர் அகதியான வண. பிரான்செஸ் ரோச்சிலா பிறதர் அன்றுசனிக்கிழமை லண்டன்நகரிலே வெஸ்ற்மினிஸ்றர் ஆசனக்கோவிலில் கருதினால் கிறிவ்வின் ஆண்டவரால் குருத்துவாபிஷேகஞ்செய்யப்படலாயினர். இவர் நேசநாடுகளின் படைகளுடன்சேர்ந்து போராடுவதற்காக 1939-ம் ஆண்டு செக்கோசிலவாகியாவிலிருந்து வெளிகொண்டார். பின்னர் 1945-ம் ஆண்டு தமதுநாட்டுக்குத் திரும்பிச்சென்று பிறேக்நகரிலுள்ள சர்வகலாசாலை மாணவர்களிடையே ஓர்கத்தோலிக்கசேவா தலைவராக விளங்கினார். பிந்த அந்நாட்டிலே கம்யூனிஸ்த ஆட்சி தலையெடுக்கத் தொடங்கியதும் பிறருடைய ஆலோசனையின் பேரிலே பிரித்தானியதேசஞ்சென்று அந்நாட்டிலுள்ள செக் சாதியினரான அகதிகள் மத்தியில் தொண்டாற்றிவரலாயினர்.

### பாராளுமன்ற கத்தோலிக்கர்

இம்மாதம் 7-ந் திகதியன்று முதன்முதலாகக்கூடிய பிரித்தானிய புதியபாராளுமன்றம் 24 கத்தோலிக்கபிரதிநிதிகளைக் கொண்டிருக்கின்றது. இத்தொகை முந்தியபாராளுமன்றத்தில் இருந்துவந்ததிலும் இருவரால் அதிகரித்துள்ளது. முந்திய பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாயிருந்து தேர்தலுக்கு முற்பட்டுநின்றவர்கள் அனைவருமே வெற்றியடைந்திருக்கின்றனர். முந்திய பாராளுமன்றத்திலே அங்கத்தவர்களாயிருந்த நால்வர் தேர்தலுக்கு முன்வரவில்லை. அவர்களுக்குப்பதில் நான்கு புதிய அங்கத்தவர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

### அமெரிக்க கத்தோலிக்கர்

நிகழும் 1955-ம் ஆண்டின் ஆரம்பத்திலே அமெரிக்க ஐக்கிய தேசத்திலும், அலஸ்காவிலும், ஹவாயன்தீவுகளிலும் 3 கோடியே 25 லட்சத்து 75 ஆயிரத்து 702 கத்தோலிக்கர் இருந்தார்களென இவ்வாண்டிற்கான அதிகார முறையான அ. ஐ. தேச கத்தோலிக்க 'டிறெக்ரறி' அறிவிக்கின்றது. இத்தொகை கடந்தஒருவருடத்திலே 9,27,278 பேராலும், கடந்தபத்துவருடங்களிலும் 80 லட்சம்பேராலும் அதிகரித்துள்ளது. சென்றவருடத்திலே அங்கு 13,310 பேர் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்துகொண்டனர். கடந்த பத்துவருடங்களிலும் அங்கு மொத்தமாகப் 11 லட்சத்து 60 ஆயிரத்து 954 பேர் மனந்திரும்பியிருக்கின்றார்கள்.

### பாப்பரசருக்கு யூதரின்நன்றி

இரண்டாவது உலக யுத்தம் நிகழ்ந்தகாலத்திலும், அதற்கு முன்னும் இம்சித்துத் துன்புறுத்தப்பட்ட யூதர்களுக்குப் பாப்பரசர்செய்த பேருதவிகளுக்கு நன்றிகூறுமுகமாகச் சமீபத்திலே இஸ்றாயேல் இன்னிசைவாத்தியகாரர் கோஷ்டியானது வத்திக்கானில் அவர் முன்பாக ஓர்சங்கீதவிழா நடத்தலாயிற்று. இத்தாலியர் அல்லாத வாத்தியகாரர் கோஷ்டி ஒன்று அவர்சமுகத்தில் சங்கீதவிழாநடத்தியது இதுவேமுதன் முறையாகும். பதினான்கு நாடுகளைச்சேர்ந்தவர்களான இந்த வாத்தியகாரரில் அதிகமானோர் துன்புறுத்தி உபாதிக்கப் பட்டவர்கள். அவ்வேளை பாப்பரசர் ஓர் தங்கச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தபடியே சங்கீதங்களைக்கேட்டு ரசிக்கலாயினர்.

### பாப்பரசரும் கமக்காரரும்

இத்தாலிய கமக்காரர் ஐக்கிய சங்கத்தைச் சேர்ந்த 35,000 பேருக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் சமீபத்திலே பாப்பரசரின் பேட்டிபெறுவதற்காகச் சம்பேதுருவானவர் மகாலயஞ் சென்றார்கள். பெரிதும் மனோற்சாகமுடையவர்களாய்க் காணப்பட்ட இவர்கள் அத்தேசத்திலுள்ள 15 லட்சம் கமக்காரர் குடும்பங்களின் பிரதிநிதிகளாவர். தமது சொற்பொழிவின்பின் பரிசுத்த பிதா தமது சிம்மாசனத்தை விட்டிறங்கி அவர்களின் தலைவர்களுடன் சம்பாஷிக்கலாயினர். அபபோது இந்த ஐக்கியசங்கத்திலே ஊக்கமாகத் தொண்டாற்றிவந்தகாரணமாகக் கலம்பியாவிலே கொலைசெய்யப்பெற்ற இருவரினதும் விதவைகளான ஜியோவான்னி முறானி, அவ்றோறொஸ்ஸி எனும் இருபெண்மணிகளும் அவருக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டார்கள்.

### அதிசய ஸ்பானிய கிராமம்

ஸ்பானிய தேசத்திலுள்ள அபார்சாஸு எனும் கிராமம் 999 குடிசனங்களையே கொண்டுள்ளது. ஆயினும் அது தன்னுடைய புத்திரர் புத்திரிகளிலே குருமாரும், பிறதர்மாரும், கன்னியாஸ்திரிமாருமாக 337 பேரைத் திருச்சபைக்கு உபகரித்திருக்கின்றது. ஒருதொகையான குடும்பங்கள் தங்கள் புதல்வர், புதல்விகளிலே ஆறு அல்லது ஏழுபேரையும் சந்நியாசசபைகளுக்கு உதவியிருக்கின்றன. நாற்பதுவருடகாலமாக அந்தக் கிராமத்திலே பங்குக்குரவராய் இருந்து வருகிறவரான சுவாமியார் 200 பேருக்கு மேற்பட்ட பையன்களுக்குத் தாமே முதற்பயிற்சி அளித்துக் குருத்துவபாதையில் அவர்களை வழிநடத்தியிருக்கின்றார். இந்தக் கிராமத்தைச்சேர்ந்த மிஷனரிமார் ஐந்துகண்டங்களிலுமே திருத்தொண்டாற்றிவருகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம்

பொதுக்கருத்து: டக்றர்மாரும், நோயாளர்களைப் பராமரிக்கும் நேர்ஸ்மாரும் கடவுள்முன்பாகத் தங்கள்பொறுப்பை உணரும்படியாக வேண்டிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
ஆனிமாதம் 23-ந் திகதி

## மருதமடு யாத்திரை

ஸ்ரீலங்காவின் ஞானவளம் பொருந்த யாத்திரைப்பதிகளுக்கெல்லாம் ஓர்நடுநாயகம்போல் திகழ்வதாகிய மருதமடுவென்னும் திருசேத்திரத்தை ஊன்றி நினைக்குந்தோறும் ஞானமனோகரம் தானாகவே பிறக்கும். கானகத்திடையே எழுந்தருளிக் காட்சியளிக்கும் வானோர்க்கரசியான பரிசுத்தசெபமாலை இராக்கினியின் பாதாரவிந்தத்தை நமது ஞானக்கண்களால் உற்று நோக்குந்தோறும் உள்ளத்தில் பரமானந்தம் தானாகவே பெருகும். அத்திருசேத்திரத்தின் கண்ணே, ஆண்டுதோறும் பதினாயிரக்கணக்கான யாத்திரிகர்கள்கூடும் சமுகத்திலே மகா ஆடம்பரமாக நடந்தேறும் ஆடிப்பெரியதிருநாளின் ஆரம்ப வைபவ ஆரவாரமானது நம்மெல்லோரையும் காந்தம்போலத் தானாகவே கவர்ந்திழுக்கும். அங்ஙனமாக, இத்துவீபத்தின் நானாபகுதிகளிலுமிருந்தே மருதமடுத் திருசேத்திரத்தை நாடி, அங்கண திரிலோகநாதனைத் தமதுதிருக்கரந்தாங்கியவராய்த் திவ்விய சிம்மாசனங்கொண்டெழுந்தருளியிருக்கும் பரம ஆண்டவளின் திருப்பாதகமலத்தைத் தேடிச் சாதிசமய பேதமின்றித் திரள்திரளாய் யாத்திரிகர்கள் சரியும் பெரியயாத்திரைகாலம் இதோ வந்திருக்கின்றது.

பூர்வத்திலே தேவப்பிரசைகளான இசிறவேல்மக்கள் பரிசுத்தகானான்தேசத்தின் கடைசியெல்லைகளினின்றும் ஜெருசலேம் தேவாலயத்தை நோக்கித் திருயாத்திரையாகப் புறப்பட்டுத் தேவநாமத்தைப் புகழ்ந்துகொண்டும், திவ்வியகீதங்களைப் பாடிக்கொண்டும் கூட்டங்கூட்டமாகச்செல்வதைக் காணுமிடத்து, அஃதுபெரும் அபூர்வகாட்சியாய்க் காணப்படுமாம். அவ்வாறே நமதுதுவீபத்தின் கடைசியெல்லைகளினின்றும் மருதமடுத் திருசேத்திரத்தை நோக்கி இலங்கைமக்கள்பலரும் யாத்திரை புறப்பட்டுச் செபமாலைத் தாயாரையும், அவர் திருக்குமாரனையும் துதித்துக்கொண்டும், செவிக்கின்பமான கீதங்களைப் படித்துக்கொண்டும், 153மணிச் செபமாலையைப் பயபக்தியாய் ஓதிக்கொண்டும் திரள்திரளாய்ச் செல்வதைக்காணுமிடத்து இஃதும் ஓர் அபூர்வகாட்சியாகுமன்றோ! திரிபுவனங்களையும், அகிலசராசரங்களையும் படைத்துக் காக்கும்பரமனை இந்த அவனியிற்பயந்த அமலியும், அற்புதங்களைப்புரிய வரம்பெற்ற அர்ச்சியசிட்டர்களுக்கெல்லாம பரம இராக்கினியுமான பரிசுத்த செபமாலைநாயகி மருதமடுத்திருசேத்திரத்தில் மழைமாரியெனப்பொழிந்துவருகின்ற அருள்மாரியை அதன் ஆடிப்பெரிய திருநாள் இனிதே தெளிவிக்கப் போதியதன்றோ!

மடுப்பதியிலே செபமாலைத் தாயாரிடம் நாம் அடைந்துகொள்ளவேண்டிய விசேஷவரங்களில், செபமாலையை — விசேஷமாய்க் குடும்பங்களைத் தற்காக்கும் குடும்ப செபமாலையைத்தக்கவிதமாய், உச்சித மேரையாய்ச் செபிப்பதற்கான வரமும் ஒன்றாய் இருக்கவேண்டும். ஏனெனில், பாத்திமாபதியிலே செபமாலைமாதா மூன்றுபிள்ளைகளுக்குக் காட்சியளித்தபோது செபமாலையைப் பக்தியுடன் செபித்துவருமாறு ஏவியிருக்கின்றார். லூர்துபதியிலே அவர் செபமாலையைக் கரத்தேந்தியவராய்க் காட்சியளித்திருக்கின்றார். திருச்சபையும், அதன் ஞானமக்களும் செபமாலையால் அடைந்துகொண்ட நன்மைகள் இம்மட்டென்று சொல்ல முடியாது. ஆதலால், நாம் செபமாலையைப் பக்தியுடன் செபிக்கப் பயின்றுகொண்டோமானால் செபமாலையைப் பக்தியுடன் செபித்துக்கொண்டு வருவோமானால் செபமாலைத்தாயாரிடமிருந்து நமக்கு வேண்டியவைகளைப் பெற்றுக் கொள்வோமென்று நம்பியிருக்கலாம். எமது இராக்கினியும், மாதாவுமாகிய செபமாலைத்தாயார் தம்முடையஇரக்கத்தின் சிம்மாசனத்திலே வீற்றிருந்து தம்மை நாடிவருவார்மேலும், தமதுபக்தியுள்ள பிள்ளைகள்மேலும் தமது அருள்மாரியை அதிகமதிகமாக மேன்மேலும் பொழிந்தருள்வாராக.

## குடும்பசெபமாலை இயக்கம்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா கோவில் விசாரணைப்பங்கின் குடும்பசெபமாலைப் படையணி இயக்கம்பற்றிய கூட்டம்ஒன்று சென்றஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மரியாயின்சேனை மண்டபத்திலே கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேமஸ் சுவாமியவர்கள் தலைமையில் நடந்தேறியது. அதற்கு விசாரணைப்பங்கின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பிரமுகர்கள்பலரும் அழைக்கப்பட்டுச் சமுகமளித்திருந்தார்கள். அவ்வேளை தலைவர்சுவாமியவர்கள் பேசியபோது: மருதமடுச் செபமாலைத்தாயார் நமதுயாழ்ப்பாண மேற்றிராசனத்திலேயே கிருபாசனங்கொண்டு எழுந்தருளியிருக்கின்றார்; அதனால் செபமாலைக்கும் நமக்குமிடையே நெருங்கிய தொடர்பிருக்கிறது; அத்திருத்தாயாரின் ஆடிப்பெரிய திருநாள் ஆரம்பமாகவிருக்கின்ற இச்சுபசந்தர்ப்பத்திலே நமதுவிசாரணைப்பங்கில் குடும்ப செபமாலைப்படையணி இயக்கம் ஆரம்பமாவதும் சமயோசிதமானதே; நமது மேற்றிராசனத்திலுள்ள சகலவிசாரணைப் பங்குகளுக்கும் நமது ஆசனக் கோவில்விசாரணைப்பங்கு சிறந்த முன்னோடியாயும், தகுந்தமுன்மாதிரிகையாயும் விளங்கக்கூடிய வகையிலே குடும்பசெபமாலைப் பக்திஇயக்கததைத் தொடக்குவோம; என்றைககும் தொடர்ந்து நடைபெறக்கூடிய வகையிலே அதனை ஸ்திரமாகத் தாபிக்க அயராதுழைப்போமெனக்கூறி நின்றார். அதன்மேல் ஆசனக் கோவில் விசாரணைப்பங்கிலே குடும்பசெபமாலைப் பக்திஇயக்கத்தின் தலைவராகப் பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்களும், உபதலைவராகச் சி. டபிள்யு. டி. அல்வீனஸ் அவர்களும தெரிவுசெய்யப் பெற்றார்கள். அதனைத்தொடர்ந்து இப்பக்தியைப் பரப்பும்விஷயமாய் விசாரணைப்பங்கு இருபதுபகுதிகளாக வகுக்கப்பெற்று, ஒவ்வோர்பகுதிக்கும் ஒவ்வோர் பகுதித்தலைவரும், உதவித்தலைவரும நியமிக்கப் பட்டார்கள். தலைவராகத் தெரியப்பெற்ற பரிமேலர்அவர்கள் பேசுகையில்: தமக்கு வயோதிகமேலிடும் இக்காலத்திலே மாதாவின் புகழையும், மகிமையையும்நாடி அப்பதவியைக் கையேற்பதாகவும், இந்தவிசாரணைப்பங்கிலே ஒவ்வோர்இல்லத்திலும் குடும்ப செபமாலைப் பக்திஇயக்கத்தைப் பரப்புவதிலே மாதாபேரால் எல்லோருமே மனோற்சாகமாக ஒத்துழைப்பார்களெனத் தாம் நம்புவதாகவுந் தெரிவித்து, குடும்ப செபமாலையைப் பரப்பும் விஷயமாய்ச் செய்யப்பட வேண்டியதிட்டங்களை விளக்கிக் கூறியதும் கூட்டம் முடிவெய்தியது. அடுத்த கூட்டம் வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கூடவிருப்பதாக அறிகின்றோம்.

## யாழ்ப்பாணமும் கிரகணமும்

பூரணசூரிய கிரகணதினமாகிய சென்ற 20-ந் திகதி திங்கட்கிழமை காலை கார்மேகங்கள் அதிகமாகக்காணப்பட்டு இடையிடையே மப்புமந்தாரம் ஏற்பட்டிருந்தபோதிலும் கிரகணத்தை நன்குஅவதானிக்கக் கூடியதாயிருந்தது. இங்கே அது முழுக்கிரகணமாய் இல்லாதிருந்தபோதிலும் முக்காற்கிரகணத்திலும் கூடியதாயிருந்தது. கூடியகிரகணமாய் இருந்தபோது சூரியன் ஏறக்குறைய மூன்றும்பிறைச் சந்திரனைப்போல் காட்சியளிக்க, எங்கும் பொழுது அஸ்தமன வேளைபோல் தோன்றியது. அப்போது அரைமணி நேரம்வரையிலே கடுங்குளிர் காற்று ஜில்லென்று வீசியது. கிரகணமுண்டாய் இருள்சூழவும் பொழுதுஅஸ்தமிப்பதாக எண்ணிப்போலும் சேவல்கள் கூவிக் கொண்டு மரங்களில் ஏறின. காகங்கள் கரைந்தன. நாய்கள் குரைத்தன. தெருக்களிலே சனங்களின் நடமாட்டம், வண்டிகளின் நடமாட்டம் மிகக்குறைவாயிருந்தன. எங்கும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. கடற்தொழிலாளிகள் அதிகமாகத் தொழிலுக்குச் செல்லவில்லை. புகைக்கண்ணாடிகள்கொண்டும், பூதக்கண்ணாடிகள் கொண்டும், 'நெகற்றிவ் பில்ம்' கொண்டும் மாணவர்களும், ஏனையவர்களும் கிரகணத்தைப் பார்த்து நின்றார்கள்.

## சதாசகாயமாதா கோணம்

### மணியால் உயிர்தப்பியது

ஸ்பானியதேசத்தில் ஓர் சேனாதிபதி இருந்தார். அவரைப்பற்றிய ஒரு சம்பவம அத்தேசததிலே பாரம்பரியமாகக் கூறப்பட்டுவருகிறது. ஏதோ ஒரு குற்றச்சாட்டுக் கிலக்காகி, கைது செய்யப்பட்டு அவர் மரணதண்டனை விதிக்கப்பட்டார். போர்வீரர் புடைசூழத் தூக்குமேடைக்கு இட்டுச் செல்லப் பட்டார். அங்கே எல்லாம் ஆயத்தமாக இருந்தன. இன்னும் ஒரேஒரு நிமிஷத்துள் அவர்கதி அதோகதிதான்.

நிசப்தமும, அமைதியும் நிலவிய அந்த அதிகாலைவேளையில் திருந்தாதி மணி அடித்தசப்தங் கேட்டது. உடனுக்குடனேதானே அந்தச் சேனாதிபதி முழங்காலில் இருந்தார். அவரோடிருந்த போர்வீரரும் முழந்தாளில் இருந்தார்கள். எல்லோருமாக மூன்றுபிரியதத்தமந்திரம் சொன்னார்கள். செபம்சொல்லி முடியாமுன்னரே வெகுவிரைவாக ஓடிவரும்குதிரையின் காலடிச்சப்தங் காதில்பட்டது. திரும்பிப் பார்த்தார்கள். ஒருசேவகன் வெண்கொடி ஏந்தியவண்ணம், அவர்கள்பக்கமாக வந்துகொண்டிருந்தான். அவன் இராசாவிடமிருந்து ஒருசெய்தி கொண்டுவந்தான். அதிலே இராசா கொலைக்குத் தீர்க்கப்பட்ட சேனாதிபதிக்கு மன்னிப்பளித்து அவரை விடுதலை செய்திருப்பதாகக் குறிக்கப்பட்டிருந்தது. அப்போது சேனாதிபதி அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயிராதென்று சொல்லவும் வேண்டுமா.

சேனாதிபதி லவாலா என்பவரின் உயிர் திருந்தாதிமணியால் தப்பியது என்று எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். இதற்குச் சந்தேகமே இல்லை.

* * *

### பையனின் செபம், உடனே சுகம்

பன்னிரண்டுவயது நிரம்பாத ஒரு பையன். அவன் பெயர் பொபி. காலிரண்டும் சூம்பி நடக்கமுடியாது வருந்தினான். லூர்துதிருப்பதிக்குச் சென்றாற் சுகங்கிடைக்குமென நம்பி, ஒரு கூட்டம் யாத்திரிகர்களோடு அவனுஞ் சென்றான்.

கோவிலின் பாரியமுன்றிலில் ஓர் சில்லுக்கதிரையில் அமர்ந்தான். சற்பிரசாத சுற்றுப்பிரகாரந் தொடங்கியது. சற்பிரசாதநாதரின் வரவை நிரைநிரையாகக் காத்திருந்த பிணியாளரின் பக்கமாகக் குருவானவர் தங்கக் கதிர்ப்பாத்திரத்தை ஏந்திச் சென்றார்.

பொபி, சற்பிரசாத வட்டத்தை உற்றுநோக்கி: "ஆண்டவரே! நான் நடக்கச் சித்தமாயிரும். மற்றப் பிள்ளைகளைப்போல நானும் ஓடிஆடி விளையாடப்பண்ணும். சுகங்கிடைத்த பின், எனக்கு ஒருதுவிச்சக்கரவண்டியுந் தாரும்" என்று மன்றாடினான். சுற்றுப்பிரகாரம் முன்னேறிச் சென்றது. பொபி தனக்குச் சுகங்கிடைக்குமென்று ஆத்திரத்தோடு காத்துக் கொண்டிருந்தான். சூம்பிய தன் கால்களைக் குனிந்து பார்த்தான். புதுமை எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை.

உடனே குறும்புத்தனமாக முகத்தைச் சுளித்துக்கொண்டு, கதிர்ப்பாத்திரத்தைப் பார்த்து, பாடல்களின் சத்தத்துக்குமேலாக உரத்த சப்தமாய், "**யேசுவே! உம்பாடு எல்லாம்சரி. ஆனால், உம்மைப்பற்றி உமது திருத்தாயாரிடம் முறைப்பாடுசெய்யப் போகிறேன்**" என்று கத்தினான். அந்தச்சணமே பொபி பூரணசுகம் பெற்றான். எழுந்து நடந்தான். தேவனாய் இருந்தும் தேவதாயாருக்கு யேசுநாதர் பயப்படும் மாதிரியைப் பார்த்தீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராணியாண்டவரின் திருமுகம்

அருமையான குருப்பிரசாதிகளே! அன்பார்ந்த சகோதரரே!

நமது பரலோகதாயாராகிய பரிசுத்த கன்னிமரியம்மாள் பக்தியானது நம்முடைய மேற்றிராசனத்தில் பண்டுதொட்டு இருந்துவரும் ஓர்பக்தியேயாகும். மதிதமடுச் செபமாலைராயகி நமதுமேற்றிராசனம் முழுவதிலும், இதன் மூலைமுடுக்குகள் எல்லாவற்றிலும் பவனிவந்த பொழுது, சகலருமே அவரை நம்முடையதாயாராகவும், பரலோகத்திலே நமக்காகப் பரிந்துபேசுகிறவராகவும் காம் ஏற்று ஆர்ப்பரித்தசம்பவம் இன்னுமே நமதுஞாபகத்தில் அழியாது இடம்பெற்றிருக்கிறது. அச் சமயம் நம்முடைய பிறசமய சகோதரர்களும் நம்முடன் ஏகோபித்து அவரைவரவேற்றதும், அவருடைய உதவிஒத்தாசையை இரந்துமன்று டிக்கேட்க இயல்பிலேயேஅவர்கள் ஏவப்பட்டதுமானகாட்சியானதுசகல ரதுஉள்ளங்களையும் அருட்டுங்காட்சியா யிருந்தது. அதன்மேல் பாத்திமா செபமாலைராயகி "செபமாலை செபியுங்கள்! செபியுங்கள்!" என்று நமக்குக் கொண்டுவந்த ஆர்வமீக்க சுபசெய்தியானது இப்போதுமே நம்முடையசெவிகளில் தொனித்துக்கொண் டிருக்கிறது. இத்திருமுகத்தின் குறிக்கோள் குடும்பசெபமாலையே.

சர்வேசுரன் ஓர்உதவியுமின்றி உலகத்தை இரட்சித்திருக்கலாம். ஆனல், கண்ணிமரியாயோடும், அவர்மூலமாயும் மனுமக்களை இரட்சிக்க நித்தியகாலந்தொட்டே அவர் திருச்சித்தங்கொண்டார். நிவ்விய இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரன் நிழலிட, அவர் நிவ்வியகர்த்தரைப் பெற் றெடுத்தார். உலகஇரட்சணிய அலுவலில் உடன்இரட்சகியாய் நம் முடைய இரட்சகரோடு அவர் ஐக்கியப்பட்டிருக்கிறார். இஸ்பிரீத்து சாந்துசர்வேசுரன் மரியம்மாளிலும், அவர்மூலமாயும் இரட்சணியத்திற் குரிய வரப்பிரசாதங்களை அளித்துவருகிறார்.

செபமாலையைப்பற்றிய தமதுசாதாரணமான நிருபத்திலே 12-ம் சிங்கராய பாப்பானவர் அழுத்தமாகக் கூறியுள்ளபடி, "தேவசித்தம் யாதெனில், மரியாயின் மூலமாகவேயன்றி வரப்பிரசாதமொன்றும் அருளப்படமாட்டாது" என்பதே. சர்வேசுரன் சர்வ வல்லபர். ஏனெனில், அவர் தாமாகவே சகலத்தையும் ஆக்கக்கூடியவர். நமது பரலோகராயகியோ பரிந்துபேசுவதிலே சர்வவல்லபமுடையவர். ஏனெனில், அவர்கேட்பதைச் சர்வேசுரன் மறுக்கமுடியாது. அவர் சர்வவல்லபமுள்ள நமது மத்தியட்சகியாய் இருந்துவருகின்றார். தேவகுமாரனின் திருச்சந்நிதானத்தில் என்றும் நமக்காகப்பரிந்துபேசவே அவர்இருக்கின்றார். தேவதாயார்தான் செபமாலையை நமதுகரங்களில் வைத்தருளினர். அவர் நமக்காகப் பரிந்துபேசிச் சர்வேசுரனிடமிருந்து வரப்பிரசாதங்களை அடைந்து தந்தருளுகிற சிறந்தசாதனம் செபமாலைதான். பரிசுத்த தேவதாயார் ஆர்ச். சாமிநாதருக்குக் காட்சிதந்து, எவ்விததுர்க்குணத்தையும், பாதகத்தையும் எதிர்த்து வெற்றிகொள்ளும் வல்லமைபொருந்திய செபமாலையை அவருக்குக் கொடுத்தார். பலநூற்றாண்டுகள் சென்றும் அதன்வல்லமை போகவில்லை. பலவீனருக்கு அது தைரியத்தைக் கொடுக்கும். பலமுள்ளவர்களுக்கு அது வெற்றியைஅளிக்கும். அதைக்கையாளுவோரும், அதிலே நம்பிக்கைவைப்போரும் தேவனிடம்செல்லும் பரலோகபாதையை விட்டு விலகுவதேயில்லை. 1917-ம் ஆண்டு பாத்திமாபதியிலே தேவதாயார் காட்சியளித்து, மனிதர் தங்கள்பாவங்களுக்காக மனஸ்தாபப்பட வேண்டுமென்றும், மனந்திரும்பித் தபஞ்செய்யவேண்டுமென்றும் கற்பித்தருளினர். அவர் தரிசனையளித்த ஆறுமுறையும் திரும்பத்திரும்ப அழுத்தமாயும், காத்திரமாயும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டது என்ன வெனில், நாம பரிசுத்தராய்ச் சீவிக்கும்படியும், பாவிகள் மனந்திரும்பும் படியும், உலகம் தேவனிடமாகத் திரும்பும்படியும், குடும்பசீவியம் பரிசுத்தமும், பாக்கியமும் நிறைந்ததாய் இருக்குமபடியும, ரூஷியா மனந்திரும்பும்படியும "செபமாலை செபியுங்கள்! செபியுங்கள்" என்பதே.

குடும்பசெபமாலை செபிப்பதினல் பாத்திமாநாயகி கேட்டுக்கொண்ட வைகளை நாம் நிறைவேற்றுகிறவராக ளாவோம். பகல்முழுவதும் கடும் வேலைசெய்தபின் மாலைவேளை குடும்பத்தைச்சேர்ந்த சகலரும் ஒன்று கூடி முழந்தாட்படியிட்டுச் செபமாலைசெபிப்பதற்குப் பரித்தியாகம் வேண்டும. பூசைப்பலிக்கு அடுத்ததாகச் செபமாலையே சிறந்தசெபமாகும். செபமாலைசெபிப்பதினல் தேவதாயாரின் மாசில்லாத இருதயத்துக்கு நம்மை அர்ப்பணமசெய்கிறோம் பிரியதத்த மந்திரத்தைச் சொல்வதாலே நமதுகடமைகளைப் பூரணமாய் நிறைவேற்றுதற்கும, நமக்குஅவசியமான புண்ணியங்களைச் சுமுத்திரையாகச் செய்வதற்கும், பாக்கியமானமரணம் அடைவதற்கும்வேண்டிய வரப்பிரசாதங்களை அடைந்து தந்தருளும்படியாகத் தம்முடையமன்றாட்டினல் சர்வவல்லபம்நிறைந்த தேவதாயாரைப்பார்த்து மன்றாடுகிறோம. 13-ம் சிங்கராயர், 10-ம பத்திநாதர், 11-ம் பத்திநாதர்ஆகிய பரிசுத்தபாப்புமார் குடும்பசெபமாலையின் முக்கியத்தைப்பற்றியும், அதனலவிளையும் நன்மைகளைப்பற்றியும் தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள்.

தற்போது திருச்சபையை ஆண்டுவருகின்ற 12-ம் பத்திநாதபாப்பரசர் விடுத்த "இன்குறாயென்சியும மாலோறும்" எனும் சாதாரணநிருபத்தில் கூறியிருப்பதாவது: எல்லாத்துக்கும்மேலாகக் குடும்பங்களிலே செபமாலைசெபிக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டு, அவ்வழக்கம் நிலைக்கச் செய்து, மேன்மேலும் அதிலே விருத்தியடைய வேண்டுமென்பதே. அதனல்நமது பரலோகஅன்னையின் ஆர்வமான கேள்விக்கிணங்கியும், பரிசுத்தபாப்புமாரின் போதனைக்கிசைந்தும் குடும்பசெபமாலைய நாம் தவறாது செபித்துவருவோமாக!

குடும்ப செபமாலை இயக்கத்தின் அப்போஸ்தலராகிய பெயிற்றன் எனும் குருப்பிரசாதி அவர்கள் இவ்வருடத்தொடக்கத்திலே இலங்கைக்கு வந்து குடும்பசெபமாலையைத் தினமும் செபிப்பதால் விளையும்நன்மைகளை கன்குவிளக்கிக்காட்டி, அவைகளை நாம் உற்றுணரச்செய்து, குடும்பசெபமாலையை நாள்தோறுமசெபிப்பதில் நமக்கு ஆர்வமும் உண்டுபண்ணிவிடலாயினர். ஆகையால், அருமையான குருப்பிரசாதிகளே, அன்பார்ந்த சகோதரரே, நமது மேற்றிராசனத்திலும் குடும்பசெபமாலை இயக்கத்தை அணிவகுத்து நடத்துங்காலம் நெருங்கிவிட்டது.

ஒவ்வொரு கட்டளைச்சுவாமியாரும் தத்தம் விசாரணைப்பங்கிலே குடும்பசெபமாலை இயக்கம் பரம்பச்செய்யப் பக்திவேகத்துடன் சமயோசித முயற்சிகள் செய்வார்களாக. தத்தம் விசாரணைப்பங்கைச் சேர்ந்த விசுவாசிகளுக்கு வசதியான காலம்பார்த்துக் குடும்பசெபமாலை இயக்கத்தை ஆரம்பிப்பார்களாக. குடும்பசெபமாலை இயக்கத்தைப்பற்றிய கைத்துணை நூலைக் குருமாரும், ஆசிரியரும், அதைப்பரப்புவோரும், இயக்கசம்பந்தமான விஷயங்களை அறியவிரும்புவோரும் வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியார், மேற்றிராசன மாளிகை, யாழ்ப்பாணம்என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

திருச்செபமாலைராயகி உங்களையும், உங்கள்குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக! அவருடைய மாசில்லாதஇருதயத்திற்கு அதிஉவப்பான இத்தக்குடுமபசெபமாலை இயக்கத்தையும் ஆசீர்வதிப்பாராக!

✠ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

## ஞானோபதேசப் பரீட்சை

— 1955 —

வருகிற கார்த்திகைமாதம் நடைபெறவிருக்கும் ஞானோபதேசப் பரீட்சைக்கு 8-ம் வகுப்பு, வடமாகாண ஆசிரியர்சங்க (N. P. T. A.) பாடத்திட்டமும், எஸ். எஸ். சி. வகுப்பு அரசினர் பாடத்திட்டமும் உபயோகிக்கலாம் என்று இத்தாற் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**T. A. J. Mathuranayagam,**
Gen. Manager of R. C. Schools
Jaffna, 21-6-55.

## நன்றியறிந்த் தோத்திரம்

பரிசுத்தசதாசகாயமாதா, சந்தியோகுமையோர், சஞ்சுசையப்பர், சந்தந்தோனியார் இவர்களின் வேண்டுதலினுல் எனதிமகனுக்கு ஏற்பட்ட ஆபத்தான வருத்தம் குணமாகிவிட்டது. இதனுல் இவர்களின் நாமங்களுக்குத் தோத்திரமாக தோத்திமின்படி இதனைப்பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் என்றென்றும், எங்கும் போற்றப்படுவதாக.

பே. கு.

மேற்கு, ஊர்காவற்றுறை

புத்தக மதிப்புரை

## இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்

இரண்டாம் பாகம்
(1500-1800)
ஆரும்வகுப்புக் கேற்றது.

ஆக்கியோன்: இ. தர்மலிங்கம்

பதிப்பகம்: சுன்னகம், வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

விலை: ரூபா 2-25

சுயபாஷைகள்மூலம் கல்வி போதிக்கப்பட்டுவரும் இந்நாளில் நம் தமிழ் மொழியில் பாடநூல்கள்பல வெளிவருதல் பெரிதும் மகிழ்ச்சிக்குரியதாகும். மத்தியதர வகுப்புக்களில் படிக்கும் மாணாக்கருக்குப் பயன்படத்தக்க சரித்திரநூல்கள் நம்மொழியில் போதிய அளவில் இல்லாதிருப்பது பெருங் குறைபாகும். உள்ளனசிலவும் தரப்படித்தப்படாதனவாக இருப்பதால் மாணவர் அவற்றைக் கற்பதில் பேரிடர்ப்படுகின்றனர். இக்குறைபாடுகளை நீக்குமுகமாகச் சரித்திரநூல்கள் எழுதுவதிற் கைவந்தவராகிய இவ்வாசிரியர் வித்தியாபகுதியாரின் ஆரும்வகுப்புப் பாடத்திட்டத்தைத்தழுவி இந்நூலியாத்துள்ளார்.

உலகநிகழ்ச்சிகளின் தொடர்புக் கேற்க எமதுநாட்டின் சரித்திரம் மாற்றமடைந்தவகையை விளக்கத்தக்க வகையில் பாடங்கள் நிரைக்கப்பட்டுள்ளன. அத்தோடு பாடவிளக்கத்திற் குதவியான தேசப்படங்களும், விளக்கப்படங்களும், அட்டவணைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடமுடிவிலும் பதித்தற்குதவியான புதிய போதனமுறைகளைத் தழுவிய சிக்கனயூட்டும் வினுக்களும் தரப்பட்டுள்ளன. ஆசிரியரின் பண்பட்ட தமிழ் நடையோ புத்தகத்துக்குப் புத்தழகைத் தருவதாயுள்ளது. ஆதலால், ஆசிரியரின் ஏனைய நூல்களைக் கல்வியுலகம் ஆதரித்ததுபோல் இந்நூலையும் ஆதரிக்குமென்பதே எமது பெருநம்பிக்கை. இவ்வாறே ஆசிரியர் ஏனைய வகுப்புகளுக்குமுரிய சரித்திரநூல்களை எழுதியுதவித் தமிழ்மொழியின் தரத்தை உயர்த்துவாராக! எமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

● சமீபத்திலே பரிசுத்தபாப்பரசரின் பேட்டிபெற்ற தரிசகர்களிலே தாய்லாந்தென அறியப்படுகின்ற சீயாட்டின் பிரதமரான மாஷல் பிபுல் சோங்கிரும் அவர்களும், மாறிஸ்ற் பிறதர்மார்சபையை அடியிட்டவரான ஆசா. மார்செலின் சம்பஞ்ஞாவின் முத்திப்பேறுபெற்றபட்டத்துக்குச் சமுகமளித்திருந்த பிரான்சிய வெளிநாட்டு மந்திரியார் எம். பி னே அவர்களும் விசேஷப்பட்டவர்களாவர்.

● சலவாயுக்குண்டுதான் கடைசியான ஆயுதமாய் இருக்கமாட்டாது; அணுக்குண்டுதான் மிகப்பயங்கரமானதென்று இற்றைக்குப் பத்துவருடங்களின்முன் நாம்எண்ணிக்கொண்டோம்; ஆனல், இப்பொழுது அது வில்லுகள் அம்புகளைப்போன்று பழையகாரியமாகி விட்டதென்று திரு. பேட்றன்ட் றசெல்அவர்கள் பேசியிருக்கின்றார்.

● இங்கிலாந்திலே பாதிரிமாராய், புறொட்டஸ்தாந்த கிறீஸ்துவர்களாயிருந்து "மனந்திரும்புவாருக்கு உதவி செய்யும்சபை"யானது அறித்தவருடம் தனது 60-ம் ஆண்டு வைரயூபிலியைக் காணவிருக்கின்றது. இந்தச் சபை சென்றவருடத்திலே அவ்வாறுமனந்திரும்பினரின் அவசியதேவைகண்டு 20,395 பவுண்உபகரித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
Noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணை சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

திருச்சபையின் அர்ச்சியசிட்டர்கள் சிலர் ஒவ்வோர் விசேஷ தேவைக்காகத் தரப்பட்டவர்கள் எனலாம். அர்ச். பிரான்சீஸ் அசிசியார் தாழ்மையை, தரித்திரத்தைப் படிப்பித்தார். அர்ச். தொமினிக் பதிதரை வென்றார். அர்ச். இஞ்ஞாசியார் புறொட்டஸ்தாந்தரை எதிர்க்க யேசுசபையை அடியிட்டார்.

அப்படிப்போல இக்காலத்திலும் "பிறர் சௌகரியங்களைக் கவனிப்பது பிற்சிநேகக் கடமை" யென்று மக்களுக்கு நினைவூட்ட ஒருவர் எழுந்தால் அவர் கனமடைவார்.

உதாரணமாக, எங்கள் கோயில்கள் கிறீஸ்தவர்களின் தொகையைக் கொள்ளாது. ஆனாலும் வாயில்களில் நெருக்கியிராமல் உள்கோயிலில் இடந்தேடினால் எல்லாரும் சாவகாசமாக ஆராதிக்கலாமென்று நினைவூட்ட ஒருவர் தேவை.

மெழுகுதிரி கொளுத்தவென்று இருக்கும் தண்டுகள் இருக்கக் கிரந்தியிலும், பீடங்களிலும், நிலத்திலும் கொளுத்துபவர்களுக்குப் புத்திபுகட்ட ஒருவர்தேவை.

கோயில்சர்வேசுரனுடையவீடு. அதுபோசனசாலையோ, முனிசிப்பல் சிங்காரத் தோட்டமோ அல்ல. செபத்தின் வீடு என்று அறிவிக்க ஒருவர் வேண்டும். ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்குப் பின்னும், நோவனைகளின் முடிவிலும் கோயில்கிறைய மணிக்கடலை, நிலக்கடலைக் கோதுகள், கந்தாசித் துண்டுகள் போடுகிறவர்களுக்கு இதை நினைவூட்ட வேண்டாமா?

பூசைக்குப் பிந்திவந்து அது முடியாமுன்னரே பேர்ய்விடுவதும் நல்லொழுக்கக் குறைவு. பூசையில் சொல்லப்படும் சாதாரண செபங்கள் எல்லாருக்கும் புரிந்த எளிய தமிழ்நடையிலிருந்தும் செபப் புத்தகமில்லாமல் வருகிறவர்களில்லையா? அல்லது புத்தகத்தைக் கொண்டுவந்து அந்தோனியார் பிரார்த்தனை, ஆரோக்கியநாதர் பிரார்த்தனை சொல்லுகிறவர்களில்லையா?

முழந்தாள் மடிக்கிற நேரம், எழுந்து நிற்கிற நேரம், தலை குனிந்து ஆராதிக்கிற நேரம் முதலியவை தெரியாமல் ஒரே இருப்பாகப் பட்டடைபோட்டு இருக்கிறவர்கள், அல்லது தூணுடன் தூணாய் நிற்கிறவர்களை நாம் காணுவதில்லையா?

சற்பிரசாதம் வாங்கியபின், வேறும் அநேகர் வாங்க இருக்கிறார்கள் என்று யோசியாமல் தோத்திரஞ் செய்கிறோமென்று கிரந்தியுடன் ஒட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு யோசனை கூற ஒருவர் வேண்டாமா?

பொதுச் செபவேளைகளில் எல்லோரும் ஏகோபித்துச் செபிப்பது விரும்பத் தக்கதும், ஓர் மும்மாதிரியு மென்று நினைவூட்டினால் நல்லதல்லவா?

கோயில்களில் உரத்துப் பேசுவதும், சிரிப்பதும் நமது மன்னனி மன்னருக்கு மரியாதைக் குறைவு என்று இடித்திடித்துக் கூறுவது யார்?

இந்தக் குறிப்புகளைச் சற்றே ஊன்றி யோசித்துப்பாருங்கள்.

**உங்கள் அன்புள்ள**
**அண்ணை.**

## திருப்பலி

திருப்பலி பூசையைப்பற்றி அநேக கதைகள் உண்டு. இக்கதைகளில் ஒன்று, நாம் பூசையில் தேவவசீகாரத்தைப் பற்றிப் படித்ததை நினைவூட்ட உதவும்.

ஓர்ஆசர் கோட்டை கொத்தளங்கள் கட்டிக்கொண்டிருந்த காலத்திலே அவருடைய ஆலயத்தில் குருவானவர் பூசை செய்துகொண்டிருந்தார். அந்தஆசர் ஏழையர். அன்று அரசியற் கருமங்களினிமித்தம் அவரால் அப்பூசைக்குச் சமூகங்கொடுக்க முடியவில்லை. அவருடைய ஏவலாளரும், நிநேகிதருமே சமூகமாயிருந்தார்கள்.

பூசைவேளையில் தேவவசீகாரநேரம் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. குருவானவர் திருஅப்பத்தை உயர்த்தினவேளை சனங்கள் அதை ஏறெடுத்துப் பார்த்தார்கள். ஆனால், அவர்கள் வெள்ளை வட்டத்தைக் காணவில்லை. அதற்குப் பதிலாகக் குழந்தையேசுவையே குரு வானவரின் கரங்களிற் கண்டார்கள்.

அவர்களிற் சிலர் அரசனிடம் ஓடிப்போய், "அரசபெருமானே! சீக்கிரம் வாருங்கள்; கோயிலிலே ஒருபுதுமை; எழுந்தேற்ற வேளையிலே குழந்தையேசுவைக் கண்டோம்" என்றார்கள்.

"விசுவசிக்கிறதற்குக் குழந்தையேசுவைக் காணத் தேவையில்லை; தேவநற்கருணையிலே யேசு இருக்கிறாரென்று எனக்குத் தெரியும்; என் கண்கள் வெள்ளை அப்பத்தைக் கண்டாலும், ஆண்டவர் சொன்னதை விசுவசிக்கிறேன்" என்று அரசர் மறுமொழி சொன்னார்.

பிள்ளைகளே! நீங்களும் இந்த அரசர் கூறியதைச் சொல்லலாம். கண்ணாற் காணவிட்டாலும் நீங்கள் விசுவசிக்கிறீர்கள். ஆண்டவர் தொம்மை அப்போஸ்தலருக்குச் சொன்னது உங்களுக்கு ஞாபகமிருக்கும். "காணவிட்டாலும் விசுவசிக்கிறவர்கள் பாக்கியவாளர்." ஆகையால்தான் எழுந்தேற்ற வேளையில் திருஅப்பத்தைப் பார்த்து, "என்ஆண்டவரே, என் தேவனே" என்று விசுவாசத்தோடும், நேசத்தோடும் சொல்லுகிறீர்கள். பாத்திரத்தை உயர்த்தும்போது திரும்பவும் அதைப்பார்த்து, "என்யேசுவே, இரக்கமாயிரும்" என்கிறீர்கள்.

குருவானவர் "இது என் சரீரம்... இது என் இரத்தம்" என்று சொல்லும்போது யேசு மெய்யாகவே பீடத்தில் எழுந்தருளுகிறார். இவ்வசனத்தை ஆண்டவர்கடைசிஇராப்போசனவேளை முதல்முறை சொன்னார். அதையே தமதுஞாபகமாகச் செய்யும்படி சீஷருக்குக் கட்டளையிட்டார்.

அந்நாட் தொடக்கம் கத்தோலிக்க குருமார் பூசைசெய்து வந்திருக்கிறார்கள். எங்கள் ஆண்டவர்தாமே இந்தப் பலியை எமக்குத் தந்தார்.

ஆண்டவர்தாமே கொடை. அவரே ஒவ்வொரு பூசையினதும் பெரிய குருவானவர். பீடத்தில் நிற்கும் குருவானவர் இந்தக் காணிக்கையைச் சார்வேசுரனுக்கு ஒப்புக்கொடுப்பதில் யேசுவினிடமாய் நிற்கிறார்.

எப்பொழுதும் பூசைத்தொடக்கத்திற்குப் போங்கள். பூசைக்குப் போகும்பொழுது பூசைப்புத்தகத்தை அல்லது செபப்புத்தகத்தை உபயோகியுங்கள். குருவானவர் சொல்லும் செபங்களைக் கவனித்து நீங்களும் சொல்லுங்கள். அவருடன் ஒருமனம், ஒருசித்தமாயிருங்கள். அப்பொழுது சனங்களும், குருவானவரும் யேசுவுடன் ஒருமன, ஒருசித்தமாவார்கள் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் முறைஇதுவே.

நீங்கள் உத்தமவிதமாய்ப் பூசை ஒப்புக் கொடுப்பதிலே ஒரு குறைபாடுண்டு. அது என்னவென்று தெரியுமா? அந்தக் குறைபாடு நீங்கும்படியாகப் பூசைசெய்யும் குருவானவர் ஒவ்வொருமுறையும் நற்கருணை உட்கொள்ளுவதுபோல நீங்களும் உட்கொள்ள வேண்டும்.

அப்பொழுது உங்கள் ஆத்துமமும், சரீரமும் ஆண்டவருடன் ஒன்றாகும். அவர் உங்களிடம் வருவார். உங்கள் உள்ளத்தில் வசிப்பார்.

## ஈசன் பாதம் போற்றுவோம்

ஓடி ஓடி எறும்பு நாளும்
உணவு சேர்த்தல் கண்டு நாம்
வாடி வாடி இறந்திடாது
வறுமை போக்கி வாழுவோம்.

காயகாகம் சிறிய உணவும்
கலந்து கூடி உண்ணல்போல்
பெரிய உலகின் மக்கள் நாமும்
பிரிந்திடாது வாழுவோம்.

நாய்க்கு உணவு தந்துவிட்டால்
நன்றி காட்டுந் தன்மைபோல்
வாழ்க்கை தந்து காக்குமீசன்
வல்ல பாதம் போற்றுவோம்.

## பெந்தெக்கோஸ்துவின் பின் 4-ம் ஞாயிறு

**நிருபம், உரோம. 8: 18—23.**

நாங்கள் சர்வேசுரனுக்காகப் படும் துன்பதுரிதங்களை நினைக்குந்தோறும் இவைகளை எப்படி, எத்தனைகாலம் சகிக்கலாம் என எண்ணுகிறது. நமது அப்போஸ்தலர் கூறுகிறார், இவ்வுலக துன்பதுயரங்கள் மலையளவாயிருந்தாலும், மறுஉலக சம்பாவனையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவைகள் அற்பமாகத் தோன்றுகின்றன. பாலர்களுக்கு மோட்சம் பிதிராச்சித சொத்து. வாலர்களுக்கோ அது பெறுபேறு மிருக்கிறது.

ஆண்டசராசரங்களுங்கூடத் தேவமக்களுக்குக் கிடைக்கவிருக்கும் மகிமையை எதிர்பார்க்கின்றன என்று அப்போஸ்தலர்கூறுகிறார் (19). மனித உபயோகத்துக்கென்று உண்டாக்கப்பட்டவை மனித பாவத்தினிமித்தம் அழிவுக்குள்ளாகிவிட்டன. தேவமக்கள் பெறவிருக்கும் சுதந்தரத்துக்கேற்றவாறு மற்றச் சிருட்டிகளும் (இரட்சகரினால்) அழிவின்மையடைய எதிர்பார்க்கின்றன (20, 21) என்று கூறிச் சிருட்டிகளின் ஆவலை விபரிக்கிறார்.

சிருட்டிகளின் இந்தஆவல்—அழிவின்மையையடையும்விருப்பம், பிரசவவேதனை யனுபவிக்கிற தாய்ஒருத்தி அதுநீங்கிப் பிள்ளைபிறந்துவிட வேண்டுமென்று படும் ஆவலைப்போலவாகும்.

23-ம் வசனத்தில் அக்காலக் கிறீஸ்துவர்களைப் பற்றிக்கூறி, பரிசுத்தஆவியின் கொடைகளை, விசுவாசம், நம்பிக்கை வரங்களை ஏராளமாகப் பெற்றுக் கொண்ட அவர்கள், வரவிருக்கும் மகிமையின் அச்சாரத்தைப் பெற்றுக் கொண்டவர்களாகையால், தேவமக்களுக்குரிய சுதந்தரத்தை எப்போது அடையலாமோ என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கின்றனர் என்று கூறுகிறார்.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

## பொழுதுபோக்கு

(வில்லியை நாய் கடித்து விட்டது. அவன் உடனே ஆஸ்பத்திரிக்குப் போய் டக்ரரின் வீட்டுக் கதவைத் தட்டுகிறான். டக்ரர் வெளியே வந்து)

டக்ரர் — "அட சனியனே! என் கதவைத் தட்டினாய்?

வில்லி— சார், என்னை அந்தச் சனியன் நாய் கடித்துவிட்டது; கொஞ்சம் மருந்து போட்டுக் கட்டிவிடுங்கள்.

டக்ரர் — உனக்குத் தெரியாதா? ஆஸ்பத்திரி காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரைதான் திறந்திருக்குமென்று.

வில்லி — எனக்கு நன்றாகத் தெரியும் சார்; ஆனால், அந்த நாய்க்குத் தெரியுமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தோமஸும் குட்டிநாயும்

நசரேத்தூரின் சிற்றில்லத்தில் ஆர்ச். சூசையப்பர் தம்முடைய தச்சுமாலில் வேலை செய்துகொண் டிருக்கும் பொழுது குழந்தையேசுவும் அங்குசின்று அவருக்குச் சிறுஉதவிகள் செய்து கொடுப்பது வழக்கம். அவருடன் விளையாடுவதற்காக அருளப்பர் ஒவ்வொருநாளும் அங்கு வந்துவிடுவார். வழக்கம்போல் இருவரும் விளையாடிக் கொண் டிருக்கும்போது ஒருமுறை ஜோண் சடுதியாக அழத்தொடங்கினர்.

ஜோண்! என்ன சம்பவித்தது? இன்றைக்கு என்னோடு சந்தோஷமில்லையா? உன் கண்களிலும் அவ்வளவு பிரகாசமில்லை; உன் உதடுகளிலும் இன்றைக்குச் சிரிப்பில்லை; கண்களிலிருந்து நீர்வடிகிறது; நான் ஏதாவது துக்கம்வ ருவித்தேனோ? என்றார் சின்னயேசு.

"இல்லை, யேசுவே! நான்உம்மோடு எப்போதும் சந்தோஷமாகவே இருக்கிறேன்; நீர் எனக்கு ஒரு துக்கமும் வருவிக்கவில்லை; தோமஸுக்கு நடந்ததை நினைக்க எனக்குக் கவலை உண்டாகிறது; அதனைத்தான் அழுகிறேன் என்றார் ஜோண.

"அதென்ன சம்பவம்? என்னநடந்தது என்பதை எனக்கு விளங்கச் சொல்லு ஜோண்."

"தோமஸ் தன்னுடைய ஸ்பொட் என்னும் நாயுடன் விளையாடிக்கொண் டிருக்கும்போது, அவர் ஒருதடியைத் தூரஎறிந்தார்; நாய் அதை எடுத்து வர ஓடியது; பின்னல்வந்த குதிரை வீரனை அவர் காணவில்லை; நாய் அந்தக்குதிரைவீரனால் கொல்லப்பட்டு உயிர் துறந்தது; இறந்தநாயைப் பார்த்துப்பார்த்துத் தோமஸ் அழுது கொண்டிருக்கிறார்; அதை நினைக்க எனக்கும் கவலை உண்டாகிறது; அதனல் அழுதேன்" என்றார் ஜோண்.

அப்படியானால் நான் உங்கள் துக்கத்தைநீக்க உதவிசெய்வேன் என்றார் சின்னயேசு. இதைக் கேட்டதும் வேலை செய்துகொண்டிருந்த சூசையப்பர் பக்கென்றுசிரித்தார். ஏனெனில், அவருடைய விளையாட்டுகளையெல்லாம் அவர் கண்கறிவார். அர்ச். சூசையப்பருக்கு அருகில் மாத்தாற் செய்யப்பட்ட ஒரு நாய்க்குட்டி இருந்தது. குழந்தையேசு அதைக் கையில் எடுத்தார்

"சின்னநாயே! உன்காதை ஆட்டு" என்றார். அதுவும் ஆட்டியது.

"சின்னநாயே! உன்வாலை ஆட்டு" என்றார். அதுவும் ஆட்டியது.

"இப்போது துள்ளிக் குதித்துக் குரைத்துக் காட்டு" என்றார். அதுவும் அப்படியே செய்தது.

"நல்லது ஜோண், இப்போது இதனைத் தூக்கிக்கொண்டுபோய்த் தோமஸுக்குக் கொடு" என்றார். ஜோணும் அதைத் தூக்கினார். தலையைத் தடவிக் கொடுத்தார்.

ஓ! யேசுவே! சரியாய் ஸ்பொட்டைப்போல் இருக்கிறது; தோமஸ் மெத்தச் சந்தோஷப் படுவார்; நான் இதோ கொண்டோடுகிறேன்; மெத்தப் பெரிய உபகாரம்என்று சொல்லிக் கொண்டே ஓடினார்.

அர்ச். சூசையப்பர் ஆனந்த மிகுதியினல் தமதுகைனைக் கட்டி அரவணைத்து முத்தம் கொடுத்தார்

மரத்தாற்செய்த குட்டி நாய்க்கு உயிர்கொடுத்த யேசுதான பெரிபவானபின் ஆகேகம் ஆயிரம் புதுமைகளைப்புரிந்து மனிதருக்கு எண்ணிறந்த நன்மைகளைச் செய்தவர். அவர் இப்போது ஒவ்வொரு கோவிலிலும் தேவநற்கருணையில்உங்களுக்காகக் காத்துக் கொண் டிருக்கிறார். அவரிடம் போய் உங்கள் தேவைகள், கவலைகளை எடுத்துச் சொல்லுங்கள். உடனே ஆறுதல் தரு ஆயத்தமா யிருக்கிறார்.

— M. J. M.

### பச்சிலைப்பளி-கரைச்சி
## சுகாதார விழா

பச்சிலைப்பளி – கரைச்சிப்பகுதிச் சுகாதாரவாரவிழா 10-6-55 வெள்ளிக் கிழமை பளை அரசினர்பாடசாலை மைதானத்திலே காரியாதிகாரி திரு. ரி. முருகேசபிள்ளை அவர்கள்தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றபோது, இப்பகுதிப் பாடசாலைகளின் கதம்பக்கச்சேரியும், பிரமுகர்கள் பலரின் கருத்தமைந்த பேச்சுக்களும் நடைபெற்றன. தலைவர்பேசுகையில்: பச்சிலைப்பளி – கரைச்சிப்பகுதிச் சரித்திரத்திலே இவ்விழாப்போன்ற மகத்தானசம்பவம் இதற்குமுன் இடம்பெறவில்லை; இதன்பெருமை சுகாதாரபரிசோதகர் திரு. க. கனகசிங்கம்அவர்களுக்கேசாருமெனக் கூறினர். புலோப்பளைக் கிராமச்சங்கதலைவர் சுகாதார சம்பந்தமாகத் தம்முடையபகுதி முன்னேற்றமடையத் தாம்முயற்சியெடுத்து வருவதாலே கிராமமக்கள் தம்முடன் ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுநின்றார். வடபகுதிக்கிராம முன்னேற்றசங்க பிரதமமேற்பார்வையாளர் (எஸ். ஆர். டி.) பேசுகையில்: வெளியான இடங்களில் மலங்கழிப்பதினால் பாண்டுரோகமும், தரவுநீரைப் பருகுவதினல்பேதி, நெருப்புக்காய்ச்சல்முதலியநோய்களும் பரவுவதாலும் அவற்றைத்தடுக்க வீடுகள்தோறும் மலகூடமும், கிணறும் அமைத்துக் கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டார். பளை அரசினர்பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. பீதாம்பரம் அவர்கள் "நீர்கருக்கி, மோர்பெருக்கி நெய்யுருக்கி உண்பவர்தம் பேருரைக்கப் போமேபிணி" என்னும் பொன்மொழியின்நுண்கருத்தைநன்குவிளக்கினர். பளைக்கத்தோலிக்கபாடசாலைஆங்கிலஆசிரியர் எஸ். அன்ரன்இராசநாயகம்அவர்கள், உடல்உரம்பெறின் உயிர் உயர்ச்சிபெறும்; உடலைக்கருத்தோடு பேணினலன்றி இம்மைமறுமை இன்பங்களைத் தேடமுடியாது; உடற்சுகத்தின் ராசகாரியாகிய நோயைஅகற்றும் ஒளடதம் சுகாதாரம்; அதனல், சுகாதாரவிதிகளைக் கைக்கொண்டு ஒழுக வேண்டுமெனத் தெளிவாகக்கூறினர். கொடிகாமம் சுகாதாரப்பரிசோதகர் திரு. ஈ. எம். தர்மவாதன்அவர்கள் சுகவழியின் ஐந்து அம்சங்களையும் விபரக்கியானம் செய்தார். ஈற்றில் கதம்பக்கச்சேரிப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்குக் காரியாதிகாரிஅவர்கள் பரிசில்கள் வழங்கும் போது, பளைக்கத்தோலிக்க பாடசாலை மாணவர்களால் நடிக்கப்பெற்ற நாட்டுக்கூத்தைப் பாராட்டி, அக்கலையை வளர்க்கும்படி கேட்டுநின்றார். பளைச் சுகாதாரபரிசோதகர் திரு. க. கனகசிங்கம்அவர்கள் நன்றிகூறியதும் விழா முடிவெய்தியது.

— கிருபர்

---

### சுகாதாரவிழா
### புங்குடுதீவு

சென்ற 10-6-55 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அழகேஉருவாகக் காட்சியளித்துநின்ற கத்தோலிக்க கலவன்பாடசாலை மண்டபத்திலேசுகாதாரவாரவிழா சுகாதாரபரிசோதகர்கள், ஆசிரியர்கள், மாணவர்மாணவிகளின் சிரியமுயற்சியாலும், ஒத்துழைப்பினலும் விமரிசையாகக் கொண்டாடப்படலாயிற்று அதற்குச் சுகாதாரபரிசோதகர் திரு. நாகலிங்கம் அவர்கள் தலைமைவகித்துப் பேசியவிடத்து: பொதுமக்கள் சுகமாகவும், சுத்தமாகவும் வாழசெய்யவேண்டும்; அவர்கட்கு வரக்கூடிய நோய்துன்பங்களைத் தடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இவ்விழா ஏற்படுத்தப்பட்டதெனக்கூறி, மக்கள் சுத்தமாகவும், சுகமாகவும் வாழ்வதற்கு என்னென்ன வழிவகைகளைக் கையாளவேண்டுமெனச் சுருங்கச்சொல்லி விளக்கினார். பின்னர் விழாவிற்பங்குபற்றிய திரு. கதிர்காமர், திரு. துரைராசசிங்கமன் பவர்களும் பேசினர்கள். பாடசாலைத் தலைமைஆசிரியர் பண்டிதர் எம். கே. கே. அருட்பிரகாசம்அவர்கள் தேடற்கரிய செல்வம்யாவற்றிலும் "சுகவாழ்வு" தான் மேன்மையானது என்பதைப் பலஆதாரங்களுடன் பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டி அழகாகப் பேசினின்றார். மாணவர்மாணவிகளின் பேச்சுப்போட்டி ஆரம்பமாகிப் பல்வேறுசுகாதார விஷயங்களைப்பற்றி அவர்கள் பேசிப் பரிசில்கள் பெற்றனர். மாணவிகள்பலர் இனியகீதங்கள்பல பாடிச் சபையோரை மகிழ்வித்தனர். பாலர்வகுப்பு மாணவிகள் இருவரின் நடனமானது யாவர்மனத்தையும் ஆனந்தக்கடலில் மூழ்கச்செய்தது. ஈற்றில் ஆசிரியர் இம்மனுவல்என்பவரால் நன்றியுரைகூறப்பட்டு விழாஇனிதே நிறைவேறியது.

— கிருபர்

---

### சுகாதாரவிழா
### வெள்ளிக் கேடயம்

சமீபத்தில் நடந்தேறிய அகில-இலங்கைச் சுகாதாரவார விழாவிலே காங்கேசன்துறைப் பட்டின சங்கத்தால் பல்வேறுபோட்டிகளும், மற்றும் நிகழ்ச்சிகளும் பட்டினமெங்கும் நடத்தப்பட்டன. இவைகள் எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் அன்று சனிக்கிழமை பிற்பகல் காங்கேசன்துறை வெளிச்சவீட்டு மைதானத்திலே பல்லாயிரக்கணக்கான மக்கள்கூடியிருந்த சமூகத்திலே பாடசாலைகளின் கதம்பக்கச்சேரிஒன்று பரிமளிப்பாக நடைபெற்றது. தபால்-தந்திப்பகுதி மந்திரியாரும், காங்கேசன்துறைப்பிரதிநிதியுமான திரு. எஸ். நடேசபிள்ளை அவர்கள் தலைமை தாங்கினர்கள். போட்டியிலே கலந்து கொள்வதற்கு எடுக்கவேண்டிய அம்சங்களாகிய பேச்சு, நடனம், நடிப்பு ஆகிய மூன்றுபகுதிகளிலுமே காங்கேசன்துறைக் கத்தோலிக்கபாடசாலைமுதலிடம்வகித்து அவற்றிற்குரிய கற்சாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டது. மேலும் வெற்றியாளருக்குரிய வெண்பொன் கேடயத்தையும்பெற்றுப் பெரும்புகழ்ஈட்டியது பாராட்டத்தக்கதே.

— கிருபர்

---

## சுகாதார விழா
### விடத்தல்தீவு

சென்ற 12-6-55 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் விடத்தல்தீவுக் கத்தோலிக்கபாடசாலை மண்டபத்தில் சுகாதாரவிழா சிறப்பாகநடந்தேறியது. அறிஞர்களும், கலைஞர்களும், சாதாரணமக்களும் திரளாகச் சமூகமளித்திருந்தார்கள். கி. ச. அக்கிராசனர் திரு. மத்தேயு அவர்கள்தலைமையில் விழாஆரம்பமாயது. பின்னர் சிறுகுழந்தைகட்கு ஆரோக்கியப் போட்டிப்பரிசுகள் வழங்கப்பட்டன. அதன்மேல் திரு. தேவதாஸ்ஆசிரியர் சுகாதாரசம்பந்தமாகவும், பெற்றோர் பிள்ளைகளை எவ்வாறு சுகாதாரமுறைப்படி வளர்க்கவேண்டும என்பதுபற்றியும், மண்ணர்ப்பகுதி ஆர். டி. ஓ. குடிநீர் சம்பந்தமாகவும், மண்ணர்ப்பகுதி டி. எம். ஓ. பொதுச்சுகாதாரம் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர். கடைசியாகக் கி. ச. அக்கிராசனர் குறிப்புரைகூறினர். பின்னர் பக்கவாத்தியங்களுடன் சிறுவரின் கோலாட்டமும், சிறுமிகளின் இசைக்கீதங்களும், உயர்தர வகுப்புமாணவர்களின் "தொற்றுநோய்"பற்றிய சுகாதாரநடித்தலும், சிறுமிகளின் நடனமும் சபையோரை மகிழ்ச்செய்தன. பின்னர் சுகாதாரபரிசோதகர் சிறிய சொற்பொழிவாற்றியதும் தேசியகீதத்துடன் விழாசிறப்பாக நிறைவாயிற்று.

போ. நாகரத்தினம்
(மாணவி)

## காவலூர்த் தபால்

### அர்ச். அந்தோனியார் திருநாள்

வழமைப்பிரகாரம் 1-6-55 புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழாக்கள் தினமும் வளர்பிறைபோல் வளர்ந்து மணமலர்போல் விரிந்து பொலிந்துவாலாயின. திருநாளுக்கு முதனாள் திவ்வியபூசையின்பின் திருச்சுரூபம் பெரிய பீடத்திலிருந்து இறக்கப்பட்டு ஆலயத்தின் மத்தியிலே பிரசித்தவணக்கத்துக்காக வைக்கப்பட்டது. பின்னர் அன்று பகல் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை மின்சாரதீபங்கள் சொலிக்க, அன்றலர்ந்த வெண்மலர்கள் கண்ணைக்கவர்ந்துநிற்க, பலிபீடம் அழகுறச்சிறக்க, குரவர் இருவர் தூணபுரிய, வண. வேதநாயகம் சுவாமியவர்களால் மாலைஆராதனை பாடப்பட்டது. திருநாளன்று காலை கட்டளைக்குரவர் வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்கள் பாடற்பூசை நிறைவேற்றினர். மாலை 5மணிக்குத் திருச்சுரூபம் அலங்கரிக்கப்பெற்றிருந்த வீதியூடே ஊர்வலமாகக் கொண்டுசென்று ஊர்முழுவதும் அற்புதவரத்தரான அர்ச். அந்தோனியாருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டதும் சற்பிரசாத ஆசீர்வாதம்அருளப்பட்டு, திருப்பண்டம் முத்திசெய்யவைக்கப்பட்டுத் திருநாள் பெருநாளாய் முடிந்தது.

### கல்லூரி விழா

அர்ச். அந்தோனியார் கல்லூரிப் பாதுகாவலர் திருநாள் செப்பரும்சிறப்புடன் இம்முறையும் கொண்டாடப்பட்டது. கல்லூரியின் மகாவாயிற்சிகரம் வானமட்டாய் உயர்ந்து, யாவரையும் கவர்ந்துநின்றது. கல்லூரிச் சதுக்கம் பலவர்ணக் கொடிகள், மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாணவர்கள் திரண்டுவந்து அன்று தினம் திருநாள்பூசைகண்டு திருவிருந்தருந்தி விழாவை ஆரம்பித்தார்கள். பூசைமுடிந்ததும் தரை முகத்திலே வள்ளவலிப்புப்போட்டி கல்லூரியின் மூப்பெரும் கழகங்களுக்கிடையே கவர்ச்சிகரமாக நடந்தது. மாலை கல்லூரி மைதானத்தில் பெருந்திரளானோர் கூடிநிற்க, விளையாட்டுப்போட்டிகள் நடந்துமுடிந்ததும் தோட்டோபசாரணை நடந்து, கல்லூரி அதிபரால் வெற்றிபெற்றோர்க்குப் பரிசில்கள்வழங்கப்பெற்று விழா சிறப்புற்றது.

— கிருபர்

---

## தேவநற்கருணைத் திருநாள்
### ஹொறணை

ஹொறணை அர்ச். பிலோமினம்மாள் கோவிலிலே 19-6-55 ஞாயிறுவாரம் தேவநற்கருணைத் திருநாள் மிகவூடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. காலை கட்டளைக்குரவர் வண. யு. சற். டப்றெறு சுவாமி அவர்களால் பாடற்பூசை நிறைவேற்றித் தேவநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பட்டது. பிற்பகல் 4மணிக்குப் பாணந்துறை வியாகுலமாதாகோவில் கட்டளைக்குரவர் வேஸ்பர்பாடிக் கதிர்ப்பாத்திரத்தைக் காங்களில் ஏந்திநிற்க, பள்ளிச்சிறார்கள், முதியோர் அணியணியாய் இருவரிசையாக நிற்க, பிலோமினம்மாள் பாடகர்தழாம் "பாஞ்சலிங்குவ....." எனும்கீதத்தைப்பாட நற்கருணைநாதர் ஊர்வலமாக வெளிகொண்டார். சுற்றுப்பிரகாரத்தின்போது ஆங்கிலம், சிங்களம், தமிழாகிய மும்மொழிகளிலும் கீர்த்தனங்கள் படிக்கப்பட்டன. மரியாயின் பெண்பாடசாலையாரின் விடுதிச்சாலையில் அமைக்க அழகிய பந்தரில் முதல்ஆசீர்வாதமும், பாடசாலையில் இரண்டாம்ஆசீர்வாதமும், கோவிலில் 'தெதேயும்' பாடி நன்றித்துதியுடன் மூன்றும் ஆசீர்வாதமும் அருளப்பட்டுத் திருநாள் இனிதேமுடிவெய்தியது.

S. A. B.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதிரித் தபால்

### கல்லூரித் திருநாள்

வதிரி, திரு இருதய கல்லூரித்திருநாள் 14-6-55 செவ்வாயன்று திரிதின உற்சவங்களுடன் ஆரம்பமாகி, மூதளுள் மாலையாராதனையுடனும், திருநாள்பாடற்பூசை, கல்லூரிமண்டபத்திலே திருஇருதய இராசாங்கஸ்தாபகம் புதுப்பிக்கும் திருச்சடங்குடனும் முடிவாயிற்று. பின்னர் அன்றுசாயந்தம் 2-30 மணிக்கு இம்மானுவேல் சுவாமியார்இல்லம், பெஞ்சமின் சுவாமியார்இல்லம், பாக்கியநாதர் பிறதர் இல்லமாகிய மூன்று இல்லங்களுக்குமிடையே விளையாட்டுப்போட்டி நடைபெற்று அதிலே பெஞ்சமின் சுவாமியார்இல்லம் கூடிய தொகையான புள்ளிகளைப்பெற்று வெற்றிமாலை சூடியது. போட்டியிலே முதலாவது, இரண்டாவதாக வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும், கூடியபுள்ளிகள்பெற்ற வீரர்களுக்குக் கிண்ணங்களும், வெற்றிமாலைசூடிய பெஞ்சமின் சுவாமியார்இல்லத்துக்குக் கேடயமும் அதிபர் சுவாமியாராலே வழங்கப்பட்டன. அதன்மேல் தேநீர்விருந்துடனும், சமுகந்தந்த பெரியார்களுக்கு ஆசிரியர் என். எம். சிங்காராசா அவர்கள்கூறிய மும்மடிச் சோபனங்களுடன் விழாநிறைவாயிற்று.

### தேவநற்கருணைத் திருநாள்

அர்ச். அந்தோனியார்கோவிலிலே 19-6-55 ஞாயிறுவாரம் தேவநற்கருணைத்திருநாள் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை எமது கட்டளைக்குரவர் வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்கள் பாடற்பூசைநிறைவேற்றினர். பிற்பகல் 4-30 மணிக்கு இருகுரவர்கள் தூணபுரிய மிருசுவில் கட்டளைக்குரவரால் மாலைஆராதனைபாடிமுடித்துச் சற்பிரசாதகதிர்ப்பாத்திரத்தைக் காத்தேந்தி நற்கருணைநாதரை வீதியெழுந்தருளச்செய்தனர். பாலர்கூட்ட, மாசில்லாதமாதாகூட்ட, திருஇருதயகூட்ட அங்கத்தவர்களும், மற்றவர்களும் அணிவகுத்துச்செல்ல, திவ்வியகானங்களோடும், தீபதூபங்களோடும் சுற்றுப்பிரகாரம் நடைபெற்று வதிரி, சுவபாஷாபாடசாலை, திருஇருதயகல்லூரி, காரவெட்டி, சுவபாஷாபாடசாலை ஆகியவற்றால் முற்றுமே இயற்கை மலர்கள்கொண்டு அலங்கரிக்கப்பட்டுச் சொர்ணமயமாய்விளங்கிய பீடங்களிலே திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து ஆசீர்வாதம் அருளப்பட்டது. ஈற்றில் 'தெதேயும்'பாடி அருளப்பெற்ற கடைசிஆசீர்வாதத்துடன் திருநாள் முடிவாயிற்று.

### அர்ச். அந்தோனியார் திருநாள்

இத்திருநாள் வழமைபோலப் பக்தியருட்சியாய் எத்தகைய வெளியாடம்பரங்களுமின்றிக் கொண்டாடப்படலாயிற்று. கட்டளைக்குரவரின் கேள்விக்கிசைந்து மக்கள் எந்தவிதமான போட்டியுமின்றியே திருவிழாக்களை அமைதியாக நடத்தினார்கள். திருவிழாக்கள் 4-ந் திகதி ஆரம்பமாயின. முதலாவது விழாவில் அலங்கரிக்கப்பட்டமாதிரிக் கோவில்தினமும் அமைந்திருக்கச் செபமாலை, பிரார்த்தனை, மாலைஆராதனை, ஆசீர்வாதம், சுரூபஎழுந்தேற்றம் முதலியவைகளுடன் எவ்வித மாற்றமுமின்றி மற்றெல்லா விழாக்களும் ஞானவிதமாய் நடந்தன. திருநாளுக்கு முதனாள் மாத்திரம் பிரபல வியாபாரியார் திரு. பி. லூக்கேஸ்பிள்ளை அவர்களின் உபயத்தில் வாவலைக்கப்பெற்ற ஏராளமான மலைநாட்டுப் புஷ்பங்கள் பலிபீடத்தையும், அக்கம்பக்கமாகவுள்ள அடுத்தார்களையும்அலங்கரித்து நின்றன. அன்று அழைக்கப்பெற்றிருந்த மூன்று குருமாரில் ஒருவரான சம்பத்திரிசியார் கல்லூரிப் பொருளாளர் வண. ஏ. எஸ். சிங்காயர் சுவாமியவர்கள் பக்திவிநயத்துடன் செபமாலையை விளக்கமாகச் செபித்து முடித்ததும் வழமைபோல ஆராதனை நடக்தேறியது. திருநாளன்று கட்டளைக்குரவர் பாடற்பூசை நிறைவேற்றிச் செய்தபிரசங்கத்திலே அர்ச். அந்தோனியாரின் சீவியவரலாற்றைச் சுருக்கமாக எடுத்துக்கூறி அம்முனிவரைப் பாதுகாவலராகக் கொண்டிருப்பது பாக்கியமேயெனச்சொல்லிமுடித்தார். சாயந்தரம் ஆயிரவருக்கு மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பெற்றுத் திருநாள முடிவுற்றது.

— நிருபர்

## கற்பிட்டித் தபால்

### சலாபமேற்றிராணியாரின் விஜயம்

தேத்தாப்பளை விசாரணைப்பங்கைத் தரிசிக்குமாறு சலாபமேற்றிராணியாரான மகாவந். எட்மன் பீரிஸ் ஆண்டவர்அவர்கள் கடந்த 4-6-55 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வண. எஸ். விசுவாசம் சுவாமியவாகளுடன் கரம்பையெண்ணுமிடத்தில் வந்திறங்கினர். விசாரணைப் பங்கைச்சேர்ந்த எல்லாக் கோவில்களினதும் சார்பாக அண்ணவிமார் மலர்மாலைசூட்டி அவரைவரவேற்றனர். பின்புபாண்டுவாத்தியங்கள்சகிதம் தேத்தாப்பளைக் கோவிலுக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப் பெற்றுக் கோவிலைச்சேர்ந்ததும் அங்கே ஊர்மக்களால் ஓர்வரவேற்புஉபசாரம் அளிக்கப்பட்டது. ஆண்டவர்அவர்கள் அருளிய ஆசீர்வாதத்தின்பின் பாடசாலை ஆசிரியர், மாணவர்கள் சார்பாகவும் அவருக்கு ஓர் வரவேற்பளிக்கப்பட்டது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தரவைக்கோவிலிலும், பாடசாலையிலும், திங்கட்கிழமைகாலை நாவற்காட்டுக் கோவிலிலும வரவேற்புஉபசாரங்கள் நடத்தப்பட்டன. 5-ந்தேதிகாலை தேத்தாப்பளைக் கோவிலிலும், 6-ந்தேதிகாலை நாவற்காட்டுக்கோவிலிலும் நடந்தேறிய பூசைகளிலே ஆண்டவர்அவர்களால் முன்னூற்றுக்கதிகமான பிள்ளைகட்கு உறுதிப்பூசுதல் வழங்கப்பட்டது.

ஆண்டவர்அவர்கள் 6-6-55 பிற்பகல் மாம்புரி, அர்ச். செபமாலைமாதா கோவிலிலும், மாம்புரி, அர்ச். சவேரியார் கோவிலிலும் கிறீஸ்தவர்களால் வரவேற்கப்பட்டபின் நரக்களிக் கிராம எல்லையிலே கட்டளைக்குரவர் வண.பிற்றர் றெட்றிக்கு சுவாமியவர்களுடன் வந்திறங்கியதும ஊரவர்கள் சார்பாகவும், கிராமமுன்னேற்றசங்கம், சனசமூகநிலையம், மீன்பிடி தொழிலாளர் சங்கம்ஆதியவற்றின் சார்பாகவும் தலைவர்களால் மலர்மாலைகள்சூட்டி வரவேற்று வாத்தியவரிசைகளுடன் கோவிலுக்கு அழைத்துச்செல்லப்பட்டு ஆசனத்தமர்ந்ததும் கிராமத்தினதும், பொதுசன ஸ்தாபனங்களினதும் சார்பாக ஆசிரியர் திரு. வி. எஸ். பிள்ளை அவர்களால் சித்திரவேலைப்பாட்டுடன் கூடிய வர்த்தமானப்பத்திரமொன்று படித்துக்கொடுக்கப்பட்டது. ஆண்டவர்அவர்கள் நன்றிகூறி ஆசீர்வாதம் அருளியபின் மாணவர்கள் அவரை ஊர்வலமாகப் பாடசாலைக்கு அழைத்துச்சென்று, அங்கே வரவேற்புக்கீதங்கள்படித்து, மாலைகள்சூட்டி வரவேற்றபின், மாணவன் பி. அன்ரனியால் வரவேற்புப்பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது. ஆண்டவர்அவர்கள் மாணவர்க்குப் புத்திமதிகள்கூறித் திருக்கர ஆசீர்வாதம் அருளியதும் வரவேற்புவைபவம் சுபமே முற்றுப்பெற்றது.

### பாடசாலைகளின் சுகாதாரவாரம்

நரக்களி, நாவற்காடு, தேத்தாப்பளைக் கத்தோலிக்க தமிழ்ப்பாடசாலைகளின் சுகாதாரவாரவிழா கடந்த 10-6-55 வெள்ளிக்கிழமை பிற்பகல் நாவற்காட்டுப் பாடசாலைமண்டபத்தில் கற்பிட்டிப்பிரிவுக் காரியாதிகாரி திரு. ஜே. ஜி. சபாபதிப்பிள்ளையவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. பாடசாலைப் பிள்ளைகளின் ஊர்வலத்தின்பின் மாம்புரிப்பற்றுக் கிராமமுன்னேற்ற ஐக்கிய சமாசத்தலைவர் ஆசிரியர் வி. எஸ். பிள்ளை, காரியாதிகாரி திரு. சபாபதிப்பிள்ளை, புத்தளப்பகுதிச் சுகாதார

## "நீ கடைசிச்சல்லி ..."

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு "வேதவாக்கியம" ஓர்தீபஸ்தம்பமபோல் நினறுபிரகாசித்து எங்களை மோட்சபாதையில் வழிநடத்தி இரட்சணியதுறையில் கொண்டுபோய்ச் சேர்க்கின்றதுஎன்பதில் சந்தேகமில்லை. அதனால் வேதவாக்கியங்களிலுள்ள ஒவ்வோர் எழுத்தையும் பரலோகமாணிக்கமாக — மோட்சமுத்தாகமதித்துப் பேணிநடக்கவேண்டியது ஒவ்வொரு உத்தமகத்தோலிக்கனுடையவும் மாறாதகடமையாகும். ஆனால், அவற்றிற்கு நாம்கொடுக்கும மதிப்பும், செல்வாக்கும் எதிலேஅடங்கும்? அவற்றிற்கு ஒத்தபடி நமது நடத்தையை — சீவியத்தைச் சீர்திருத்தி நடப்பதில் அடங்கும். "கிறீஸ்துநாதரே எனக்குச் சீவன், மரணம், ஆதாயம்" (பிலி. 1 : 21) என்று பாவிலுஅப்போஸ்தலர் சொல்லியதுபோல, கிறீஸ்துநாதரின் அருள்வாக்கியங்களை ஆவிதமேநாம் ஏற்றுநடப்போமானால், மீண்டும் அதே அப்போஸ்தலர் சொல்லியதபோல், "நான்சீவிக்கிறேன், ஆகிலும்நானல்ல, கிறீஸ்துநாதரே என்னிலசீவிக்கிறார்" (கலா. 2 : 20) என்று நம்மிலஒவ்வொருவரும் சொல்லக்கூடியவர்களாய் இருப்போம ஆகலால், வேதவாக்கியங்களை நாம் உயிருள்ளவிசுவாசத்தோடுஏற்று, அவற்றிற்படி நடக்கத் தேவஒத்தாசையைக்கொண்டு நம்மாலானமட்டும் வருந்துவோமாக!

(தொடரும்)

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தகூட்டம் அடுத்தவரும் 24-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். அப்போது பதிலொரு சகோதர-சகோதரிகள் தமதுவார்த்தைப்பாட்டைச் செய்வார்கள். இதுஆடம்பரமான ஓர் கூட்டமாயிருப்பதால் எல்லா அங்கத்தவர்களும் தங்கள் உடுப்புகளைக் கொண்டுவருவார்களாக. ஆடிமாதத்தில் பரிபூரணபலன்கள் அடையக்கூடியநாட்கள்:— 8, 9, 11, 14, 21(2), 23, 26,27. பொதுப்பாவமன்னிப்பு அடையக்கூடியநாள்:— 2-ம் திகதி.

A. S. FRANCIS OF MARY
for Director

---

வைத்திய அதிகாரி திரு. விஜயசிங்க, கிராம முன்னேற்ற உத்தியோகஸ்தர் திரு. பரராஜசிங்கம் ஆகியோரால் முறையே "அரசாங்கத்தின் சுகாதார முன்னேற்றவேலைகள்", "நாளாந்த சுகாதாரக் கடமைகள்", "குடிதண்ணீர்ச்சுத்தம", "கிராம சுகாதாரம்" என்னும் விஷயங்கள்பற்றி அரியசொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பின்னர் மாணவரின் பேச்சுப்போட்டிகள் நடைபெற்றன. படங்கள், மாதிரி உருவங்களின் பொருட்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. காட்சிப் பொருட்களிலும், ஊர்வலத்திலும், பேச்சிலும் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் நரக்களிச் சிரேஷ்ட உயர்தர பாடசாலை அநேக வெற்றிகளேயீட்டி அரைவாசிக்குஅதிகமான பரிசில்களைப் பெற்றுக்கொண்டது. நாவற்காட்டுக் கனிஷ்ட பாடசாலை மாணவரால் சிறுசுகாதார நாடகமொன்று நடித்துக்காட்டப்பட்டபின் மாம்புரிப்பகுதிச் சுகாதார பரிசோதகர் திரு. சோமாதத்தின அவர்களின் நன்றியுரையுடனும், சிற்றுண்டியுபசரணையுடனும் விழா சுபமே முடிவடைந்தது.

— நிருபர்

விற்பனைக்கு:

திரு இருதய
வணக்கமாதம்

(வண. யோசெவ் அல்பீபான்ஸ் சுவாமிகளால் எழுதப்பெற்ற புதியபுத்தகம்.)

பிரதிவிலை: ரூபா 1 சதம் 50.

* * *

விளம்பர விகிதம்

| | ரூ. | ச. |
|---|---|---|
| நன்றியறிதல்தோத்திரம் ... | 2 | 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 | 00 |
| ஓடர் நிசி (Order Nisi) இரண்டுமுறைக்கு ... | 10 | 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென்வினசென்ற் டிபோல் தருமசபை யாழ்ப்பாணம்

---

கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

பூனைப்பிட்டி: ரி. செபஸ்தியாம் பர்னாந்து 2-00 — கல்லிலை: எஸ். நடராசா 5-00 — கல்கமுவா: வி. சந்தியாப்பிள்ளை 4-00 — பண்டாரவளை: மிசெஸ் ஜே. ஏ. இராயர் 1-00, சூசைமரியை பீற்றர் 7-50 — லின்டுலா: எம். பி. போல் 3-00 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 10-00 — முள்ளிக்குளம்: ஏ. பி. இன்னாசியா கூஞ்ஞ 2-00, சுத்தியா சில்வா 4-00, கே. வலத்திசார் கூஞ்ஞ 2-00, எஸ். ஞானம்மா குரூஸ் -50, பி. பிலோமினம்மா டயஸ் -50, மிசெஸ். பிரான்சிஸ் குரூஸ் 1-00, எஸ். லுக்கேஸ் லெம்பேட் 5-00 — உடப்புசலாவை: ஏ. எஸ். பீற்றர் 7-00 — மறிச்சுக்கட்டி: டி. டி. யோசேப் 3-00 — கம்பளை: ஆர். சிவலிங்கம் 2-00, மிஸ் ஏ. டி. சேவியர் 4-00 — அம்பிற்றியர: எம். டானியல் 1-00 — கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 2-00, பி. கபிரிகேற்பிள்ளை 2-00, இற்றுலை: பிறங்அன்ரன் 4-00, மிசெஸ் பிறங்அன்ரன் 2-00 — கற்பிட்டி: எஸ். பி. நோனீஸ் 5-50 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின 20-00 — வறியப்பொலா: டி. ஜி. டேவிற் 2-00 — டிக்கோயா: ஏ. பி. குலசிங்கம் 5-00 — மறிச்சுக்கட்டி: எஸ். பவல் குரூஸ் 2-00 — வட்டவளை: ரி. அன்ரனி குரூஸ் 4-00 — அக்கரபற்றன: எல். ஏ. எஸ். தோமஸ் 8-00 — குருனகல்: ஜி. எஸ். இன்னத்தம்பி 1-00 — காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00 — கொழும்பு: எஸ். தோமஸ்பிள்ளை 10-00, மிஸ் ஏ. அந்தோனிப்பிள்ளை 4-00, கே. அல்வீஸ் பெறேரு 1-00, ஓர்உபகாரி 2-00, கே. அந்திரேயாஸ் 3-00 — டிம்போடிமு: பி. ரி. சூசைப்பிள்ளை 1-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 1-50 — வவுனியா: பி. ஜே. சிறில் 1-00 — கருக்குப்பனை: டபிள்யு. மேரி பெர்ணண்டோ 2-00 — யாழ்ப்பாணம்: ஏ. எம். ஜேக்கப் 20-00 — டிமுனிக்காகல: வி. சாமுவேல் 5-00 — நீர்கொழும்பு: இசபேல் பதுஞ்சு 1-00 — கலவாக்கொலை: கே. மைக்கல் 5-00 — வேப்பங்குளம்: எம். பி. பிலோமினம்மா 3-00 — மஸ்கேலியா: எம். உத்தரியம் செப்ஸ்தியம்மாள் 2-00.

The Director,
St. Joseph's
Conference.
Bishop's House
JAFFNA.

சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர்
மேற்றிராசனமாளிகை
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 23-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org